பக்கங்கள்: 13

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 25 வெள்ளிக்கிழமை 07.06.2024 கதிர் 212

# வடக்கு, கிழக்கில் அரசியல்வாதிகளுக்கு பயங்கரவாத தடைப் பிரிவு அச்சுறுத்தல்

## சிறீதரன் எம்.பி. நாடாளுமன்றில் உரை

வடக்கு, கிழக்கில் அரசியல் செயற்பாட்டாளர்களைதொடர்ச்சியாக விசாரணை செய்து அச்சுறுத்தி தமிழ் மக்களின் இயல்புவாழ்க்கையைசிதைக்கும் திட்டத்தை பயங்கரவாத தடுப்பு பொலிஸார் முன்னெடுத்துவருகின்றனர்என்றுதமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பனர் சிறீதரன் தெரிவித்தார்.

கடந்த மூன்று மாதங் ☞2

## இனி இது ரகசியம் அல்ல!

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதா இல்லையா என்பதை ரணில் விக்கிரமசிங்க அறிவிக்கவில்லை என்றாலும் அவர் போட்டியிடுவதற்கான ஆயத்தங்கள் எல்லாம் செய்யப்பட்டுக்கொண்டே இருக்கின்றன. ஆனாலும் கடைசி நேரத்தில் அவர் போட்டியிடாமலேயே விலகி ஒடிவிடுவார் என்கிற எதிர்பார்ப்பும் பலரிடமும் இருக்கிறது.

தேர்தலில் போட்டியிடுவதற்கான ஏற்பாட்டின் ஒருபகுதியாக கொழும்பில் தனது அரசியல் அலுவலகத்தை நேற்று சுப நேரத்தில் திறந்து வைத்தார் ரணில்.

புதிய அலுவலகம், கொழும்பு சேர் எர்னஸ்ட் டி சில்வா மாவத்தையில் அமைக்கப்பட்டுள்ளதுடன் எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் இந்த அலுவலகத்தின் ஊடாகவே மேற்கொள்ளப்படவுள்ளது.

நாரஹேன்பிட்டி அபயாராமாதிபதி, மேல் மாகாண பிரதம சங்கநாயக்க, கொழும்பு பல்கலைக்கழக வேந்தர் வண. கலாநிதி முருத்தெட்டுவே ஆனந்த தேரர், கொள்ளுப்பிட்டி ☞2

## ரி.ஐ.டி. விசாரணைக்கு இருவருக்கு அழைப்பு

மட்டக்களப்பு மாவட்ட இலங்கை தமிழ் அரசுக் கட்சி வாலிபர் அணி முன்னாள் தலைவர் மற்றும் தமிழ் இளையோர் மக்கள் இயக்க ஒருங்கிணைப்பாளர் ஆகிய இருவரையும் எதிர்வரும் 11, 12 ஆகிய திகதிகளில் பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் அவர்களது வீடுகளுக்கு சென்று மட்டக்களப்பிலுள்ள அலுவலகத்துக்கு விசாரணைக்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளனர்.

மாவட்ட தமிழ் அரசுக் கட்சி வாலிபர் அணி முன்னாள் தலைவரும் அபிவிருத்தி உத்தியோகத்தருமான லோ. திபாகரனை எதிர்வரும் 11ஆம் திகதி விசாரணைக்கு வருமாறு ☞2

## மின்சார சபை சட்டமூலம் சபையில் நிறைவேற்றம்

இலங்கை மின்சார சட்டமூலம் 44 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

சட்டமூலம் மீதான இரண்டாம் மதிப்பீட்டு விவாதத்தின் பின்னர் எதிர்க்கட்சியினால் வாக்கெடுப்பு கோரப்பட்டது.அதற்கமைய இடம்பெற்ற வாக்கெடுப்பில் சட்டமூலத்திற்கு ஆதரவாக 103 வாக்குகளும் எதிராக 59 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

அதனையடுத்து, குழுநிலையின் போது சட்டமூலத்திற்கு ☞2

## மின்சார சபைச் சட்டமூலத்தால் நாடாளும்ன்றில் கருத்து மோதல்

நாடாளுமன்றம் நேற்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியபோது மின்சார சபை மறுசீரமைப்பு சட்டமூலத்தை இரண்டு நாட்களுக்குவிவாதத்துக்குளடுத்துக் கொள்ளுமாறு எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள் வலியுறுத்தினார்கள்.

இதன்போது மின்சாரத்துறை அமைச்சருக்கும்,எதிரணியின் உறுப்பினர்களுக்கும் இடையில் கடும் தர்க்கம் ஏற்பட்டது.

ஒழுங்குப்பிரச்சினையை முன்வைத்து உரையாற்றிய எதிரணியின் சுயாதீன உறுப்பினர் சந்திம வீரக்கொடி, ஏதேனும் சட்டமூலம் தொடர்பில் உயர்நீதிமன்றம்வழங்கும்வியாக்கியானத்தையும், அந்தசட்டமூலத்தையும் ஆராய்ந்து துறைசார் மேற்பார்வை குழு நாடாளுமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். ஆனால், இலங்கை மின்சார சபை மறுசீரமைப்பு சட்டமூலம் ☞2

## தேரர் கைது

இலங்கை மின்சார சபைச் சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து நாடாளுமன்றத்திற்கு அருகில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் பலாங்கொடை கஸ்ஸப தேரர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை மின்சார சபைச் சட்டமூலத்தினூடாக அடிப்படை உரிமை மீறப்படுவதால், அரசமைப்பிற்கு ஏற்ற வகையில்சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைஅவசியமாகும் என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.

உயர் நீதிமன்றத்தினால் பரிந்துரைக்கப்பட்ட திருத்தங்களை மேற்கொள்ளும் பட்சத்தில், சட்டமூலத்தை இலகுவாகநிறைவேற்றிக் கொள்ள முடியும் என அண்மையில்சபாநாயகர் நாடாளுமன்றத்தில் ☞9

## கொழும்பில் இருந்து தொடருந்து இல்லை

### சாரதிகள் பணிப் புறக்கணிப்பு

லொக்கோமோட்டிவ் ஒப்பரேட்டிங் எஞ்சினியர்ஸ்தொழிற்சங்கத்தை சேர்ந்த இரண்டு தொடருந்து பணிமனைகளில் கடமையாற்றும் தொடருந்து சாரதிகள் நேற்று நள்ளிரவு முதல் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடத் தீர்மானித்துள்ளனர்.

பதவி உயர்வு வழங்கப் படாமை, ஆட்சேர்ப்பில் நிலவும் தாமதம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளுக்குதீர்வுவழங்குமாறு கோரி இவர்கள் இந்த பணிப்புறக்கணிப்பை முன்னெடுக்கவுள்ளனர்.

இதனால் ☞2

## ஸ்டார் லிங் இணைய சேவைக்கு தொடக்க அங்கீகாரம் கிட்டியது

இலங்கையில் செய்மதி தொழில்நுட்பத்தின்ஊடாகஇணைய வசதிசேவையைவழங்க 'ஸ்டார் லிங்' நிறுவனத்திற்கு இலங்கை தொலைத்தொடர்புஒழுங்குபடுத்தல்ஆணைக்குழு ஆரம்பஅங்கீகாரம்வழங்கியுள்ளதாகதொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தெரிவித்தார்.

இந்த இணைய சேவை வசதிக்கான அனுமதியை வழங்குவதற்கு முன்னர் பொது மக்களின் கருத்துக்களைப் பெறுவதற்கு 14 நாட்கள் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகவும்அதன்பின்னரே தொலைத்தொடர்புஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் இந்த இணைய சேவையை இலங்கையில் நடைமுறைப்படுத்த முடியும் எனவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்தோனேசியாவில் அண்மையில் நடைபெற்ற 10 ஆவது உலக நீர் ☞2

## ஆளும் தரப்பு எம்.பி. மீதான தாக்குதல் வாக்குமூலம் பதிவு செய்கிறது பொலிஸ்

நாடாளுமன்ற உறுப்பினர் குணதிலக்க ராஜபக்சமீது மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படும் தாக்குதல் தொடர்பில் நாடாளுமன்றஉறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே மற்றும் பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்குமூலம் வழங்க உள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் குணதிலக்க ராஜபக்சவினால் நேற்று வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதாகபொலிஸ் ஊடகப்பேச்சாளர்நிஹால் தல்துவதெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றஉறுப்பினர் இராணுவ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் நிலையில் இந்த வாக்குமூலம்பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஜூன்3நடந்தஆளும் கட்சிநாடாளுமன்றஉறுப்பினர்கள் கூட்டத்தின் பின்னர் மஹிந்தானந்த அளுத்கமகேவின் தாக்குதலால் நாடாளுமன்ற உறுப்பினர் குணதிலக்க ராஜபக்சவுக்கு கடுமையான உடல் உபாதை ஏற்பட்டதாக கோட்டை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

நாடாளுமன்றஉறுப்பினர் குணதிலக்கவின் மகன்செய்தஇந்தமுறைப்பாட்டில், நாடாளுமன்ற உறுப்பினர்அளுத்கமகே தாக்கியதில்தனதுதந்தையின் கால் உடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மஹிந்தானந்த அளுத்கமகேவோ ☞2

## ஞாயிறன்று யாழ். வருகிறார் எதிர்க் கட்சித் தலைவர் சஜித்

### ஸ்மார்ட் வகுப்பறைகளை வழங்குவதற்காக

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாசஎதிர்வரும்ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்திற்கு வருகை தருகிறார். வியாழக்கிழமை வரை அவர் இங்கு தங்கியிருப்பார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடகப் பேச்சாளரும் பிரதிச் செயலாளருமான உமாச்சந்திரா பிரகாஷ் இதனைத் தெரிவித்தார்.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி தொகுதி பிரதம அமைப்பாளர் மரியதாஸ் மரியசீலன் தலைமையில் கிளிநொச்சி பாரதி வித்தியாலயம், யாழ்ப்பாண தொகுதி பிரதம அமைப்பாளர் வெற்றிவேலு ☞8

## மோடிக்கு சிறீதரனும் வாழ்த்து

நடைபெற்றுமுடிந்த இந்திய நாடாளுமன்றதுக்கான 18ஆவது மக்களவைத் தேர்தலில் வெற்றிபெற்றதற்கமைய, தொடர்ந்து மூன்றாவது முறையாகவும் பாரத தேசத்தின் பிரதமராகப் பதவியேற்கவுள்ள நரேந்திர மோடிக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்.மாவட்ட பாராளுமன்றஉறுப்பினர் சிவஞானம் சிறீதரன் வாழ்த்துரைத்துள்ளார்.

தாங்கள் இந்திய மக்களின் மன உணர்வுகளைவென்றிருப்பதன் பிரதிபலிப்பாகவே மக்களவைத் தேர்தலில் பெற்றிருக்கும் இந்த வெற்றி அமைந்திருக்கிறது. பாரதத்தின் அரசியல், பொருளாதார, சமூக நலன் சார்ந்து தாங்கள்ஆற்றவிருக்கும் பணிகளின் விளிம்பில், ஈழத் தமிழர்களுக்கும் இந்திய தேசத்துக்கும் இடையே இழையோடியிருக்கும்உறவின் கனதியை உயிர்ப்பிக்க வேண்டிய காலக் கடமையும்தங்களிடத்தே தரப்பட்டிருப்பதாக நாம் உணருகிறோம். ☞2

### ரோயல் பார்க் கொலை வழக்கில்

## மைத்திரியின் பொதுமன்னிப்பு தவறு என்று நீதிமன்றம் தீர்ப்பு

ரோயல் பார்க்கில் இவோன் ஜோன்சன் எனும்யுவதியைகொலை செய்தமைக்காகதூக்குத் தண்டனை விதிக்கப்பட்டஜூட்சமந்தஜயமஹவிற்கு முன்னாள் ஜனாதிபதிமைத்திரிபால சிறிசேன வழங்கிய பொதுமன்னிப்பு அரசமைப்பிற்குமுரணானதுஎனஉயர்நீதிமன்றம் நேற்றுதீர்ப்பளித்துள்ளது.

இந்த வழக்கின் தீர்ப்பு தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவொன்றை பரிசீலித்த உயர் நீதிமன்றம் இதனை அறிவித்துள்ளது.

2005ஆம் ஆண்டு ரோயல் பார்க் சொகுசு தொடர்மாடிகுடியிருப்பில் இவோன் ☞8

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

வாழுகாராம மகா விகாரை உட்பட ஐந்து மகா விகாரைகளின் விகாராதிபதி, ஊவா பிராந்திய பிரதம சங்கநாயக வண, மஹரகம நந்த நாயக்க தேரர் , உள்ளிட்ட மகா சங்கத்தினர் இதன்போது பிரித் பாராயணம் செய்து ஜனாதிபதிக்கு ஆசிவழங்கியதுடன் ஏனைய சமயத் தலைவர்களும் சமயவழிபாடுகளை நடத்தி ஆசிர்வாதங்களை வழங்கினர்.

ஜனாதிபதியின் அரசியல் அலுவலகத்தை நிறுவுவதற்கான தொடக்க நடவடிக்கைகள் ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்தனவின் தலைமையில் மேற்கொள்ளப்பட்டது.

பேராசிரியர் மைத்திரி விக்ரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், தேசிய பாதுகாப்புத் தொடர்பான ஜனாதிபதியின் மூத்த ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்பாட்டாளர்கள் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

விரைவில் இந்த அலுவலகம் முழு வீச்சில் தனது பணிகளைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது என்றால் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து தன்னைத் தனிமைப்படுத்தி ஒரு பொது வேட்பாளராகத் தன்னை நிறுத்தும் யோசனை ரணிலுக்கு உண்டு. அதற்கேற்றவகையிலேயே ஐ.தே.க. தலைமையகத்திற்குப் புறம்பாக ரணிலுக்கு என தனியாக இந்த அலுவலகம் அமைக்கப்பட்டு திறக்கப்பட்டுள்ளது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## வடக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
களில் மாத்திரம் பயங்கரவாத தடுப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவினரால் அழைக்கப்பட்ட ஏழு தமிழர்களின் விவரங்களைத் தெரிவித்த, இலங்கை தமிழ் அரசு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், இந்த அடக்குமுறையை நிறுத்துமாறு ஜனாதிபதியிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஜூன் 4ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு அனுப்பிய கடிதத்தின் பிரதி அன்றைய தினமே நாடாளுமன்றத்திலும் அவரால் சமர்ப்பிக்கப்பட்டது.

கடிதம் அனுப்பப்பட்ட தினமான ஜூன் 4ஆம் திகதி தமிழ் அரசு கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர் கருப்பையா ஜெயக்குமார் பயங்கரவாத தடுப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவின் கிளிநொச்சி அலுவலகத்திற்கு அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டுள்ளார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, கிளிநொச்சி மாவட்டக் கிளையின் செயலாளர் வீரவாகு விஜயகுமார், கடந்த பெப்பரவரி 14 மற்றும் மே 31ஆம் திகதிகளில் பயங்கரவாத தடுப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவின் கிளிநொச்சி அலுவலகத்திற்கு அழைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

கரைச்சிப் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் சண்முகராஜா ஜீவராஜா, கடந்த ஏப்ரல் 04ஆம் திகதி பயங்கரவாத தடுப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவின் கொழும்பில் அமைந்துள்ள அலுவலகத்திற்கு அழைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

எழுத்தாளரும், ஆசிரியரும், தீபச்செல்வன் என அறியப்படுபவருமான பாலேந்திரம் பிரதீபன் ஏப்ரல் 11ஆம் திகதி பயங்கரவாத தடுப்பு மற்றும் புலனாய்வுப்பிரிவின் கிளிநொச்சி அலுவலகத்திற்கு அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டுள்ளார்.

பூநகரிப் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் சிவகுமாரன் ஸ்ரீரஞ்சன் ஏப்ரல் 20ஆம் திகதி பயங்கரவாத தடுப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவின் கிளிநொச்சி அலுவலகத்திற்கு அழைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

கரைச்சிப் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதன் ஏப்ரல் 26ஆம் திகதி பயங்கரவாத தடுப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவின் கிளிநொச்சி அலுவலகத்திற்கு அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டுள்ளார்.

பூநகரி பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் ஜெயச்சித்ரா தயானந்தன் மே 27ஆம் திகதி பயங்கரவாத தடுப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவின் கொழும்பில் அமைந்துள்ள அலுவலகத்திற்கு அழைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக, அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மார்ச்மாதம் 26 ஆம் திகதி அன்று கைது வவுனியா தோணிக்கல் பகுதியைச் சேர்ந்த செல்வநாயகம் ஆனந்தவர்ணன், கொழும்பில் உள்ள பயங்கரவாத தடுப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவிற்கு அழைக்கப்பட்டதன் பின்னர் கைது செய்யப்பட்டதாக ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போது அவர் வெலிக்கடை சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை மீளக் கட்டியெழுப்ப முயற்சித்த குற்றச்சாட்டின் பேரில் கடந்த மார்ச் மாதம் கைது செய்யப்பட்ட இவர், 2009ஆம் ஆண்டு விடுதலைப் புலி உறுப்பினராக இருந்த போது கைது செய்யப்பட்டு 2017ஆம் ஆண்டு விடுவிக்கப்பட்டதாக அந்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களின் பிள்ளைகள் மற்றும் குடும்ப உறுப்பினர்களின் கல்வி மற்றும் எதிர்காலத்திற்காக அவர் நலன்புரிப் பணிகளைச் செய்து வந்ததாகவும் குறிப்பிடப்படுகின்றது.

ஒரு வருடத்திற்கு முன்னர் இந்தியாவில் இருந்து இந்நாட்டிற்கு வரும்போது விமான நிலையத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டு தற்போது வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள திருகோணமலை மூதூர் பகுதியைச் சேர்ந்த எஸ். சுதாகரன் தொடர்பில் தமிழ் மக்களின் பிரதிநிதி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறான கைதுகள் மற்றும் பயங்கரவாத பொலிஸ் விசாரணைகளை நிறுத்துமாறு கோரி சிவஞானம் சிறீதரன் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில், வடக்கில் அரசியல் செயற்பாடுகளுக்கு எதிரான அடக்குமுறைகள், அரசு தொடர்பில் எதிர்மறையான கருத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்கு, கிழக்க தமிழ்த் தேசிய தளத்தில் இயங்கும் பல ஆர்வலர்களின் சமூக மற்றும் அரசியல் செயற்பாடுகளை முடக்கி அவர்களை அச்சுறுத்தும் வகையிலான விசாரணைகளும், கைதுகளும் பரவலாக இடம்பெற்று வருகின்றமை தங்களது அரசு குறித்து எதிர்மறையான கருத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ள நிலையில், சமகாலத்தில் இடம்பெறும் விடயங்கள் தொடர்பில் உங்கள் அவதானத்தை செலுத்துமாறு கேட்கின்றேன்.

தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதியிடம் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இவர்களை விடுதலையை விரைவுபடுத்துவதோடு எமது மக்களின் இயல்பு வாழ்வை சிதைக்கும் வகையில் மேற்கொள்ளப்படும் விசாரணைகள், அச்சுறுத்தல்களை தடுத்து நிறுத்துமாறு கேட்கின்றேன் என்றார்.

## ரி.ஐ.டி......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கடிதம் ஒன்றை பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் வழங்கியுள்ளனர்.

அதேவேளை, தமிழ் இளையோர் மக்கள் இயக்க ஒருங்கிணைப்பாளரும் மனித உரிமை செயற்பாட்டாளருமான கொக்கட்டிச்சோலையைச் சேர்ந்த ஜீவரெத்தினம் தவேஸ்வரனையும் எதிர்வரும் 11, 12 ஆகிய திகதிகளில் விசாரணைக்கு வருமாறு பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் அழைப்பு விடுத்துள்ளதாகவும் கடந்த காலம் ஒரே நாளில் 11 மணித்தியாலம் 45 நிமிடங்கள் தடுத்துவைக்கப்பட்டு மட்டக்களப்பில் உள்ள பயங்கரவாத தடுப்பு பிரிவின் அலுவலகத்தில் வாக்குமூலம் பெறப்பட்ட நிலையில் இந்த புதிய அழைப்பு கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## மின்சார....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
திருத்தங்கள் முன்வைக்கப்பட்டதுடன், மூன்றாவது மதிப்பீடு வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டது.

மின்சக்தித் துறையில் மேற்கொள்ளப்படும் மறுசீரமைப்புக்களுக்குத் தேவையான ஏற்பாடுகளை முன்னெடுக்கும் நோக்கில், இந்தச் சட்டமூலம் ஏப்ரல் 25 நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, சட்டமூலம் நிறைவேற்றப்பட்டதை அடுத்து மறு அறிவித்தல் வரை அனைத்து ஊழியர்களின் விடுமுறைகளையும் இரத்துச் செய்யும் சுற்றறிக்கையை இலங்கை மின்சாரசபை வெளியிட்டுள்ளது.

இது ஜூன் மாதம் 5ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை குறிப்பிட்டுள்ளது. இதற்கான காரணம் என்னவென்பது அறிவிக்கப்படவில்லை. எனினும் புதிய சட்டத்திற்கு எதிராகப் போராட்டங்கள் நடக்கலாம் என்ற அச்சம் காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## ஆளும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவ்வாறான எந்தவிதமான தகராறிலும் தாம் ஈடுபடவில்லை என உறுதியாக மறுக்கிறார்.

## மோடிக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைத்தீவில், ஈழத்தமிழ் மக்களுக்கென அர்த்தமுள்ளதும் அடிபணியாததுமான சமஸ்டி முறையிலான நிரந்தர அரசியல் தீர்வைப் பெற்றுத்தருவதில் இந்தியாவே பாதுகாப்பு அரணாக இருக்க வேண்டும் என்பதே எமது இனத்தின் நீண்டகால எதிர்பார்ப்பாகும். அந்தவகையில் தங்களது அனுசரணையும் அழுத்தமும் இன்றி இலங்கைத்தீவில் தமிழ் மக்கள் தமக்குரித்தான உரிமைகளுடன் வாழும் வாய்ப்பைப் பெறமுடியாதென்பதை நாம் திடமாக நம்புகிறோம்.

போருக்குப் பின்னரும் இன, மத அடக்குமுறைகளுக்கு ஆளாகியிருக்கும் எமது மக்களின் ஆட்சி உரிமை மற்றும் அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்காக, எமது கட்சியாகிய இலங்கைத் தமிழரசுக் கட்சி உள்ளிட்ட தமிழ்த்தேசியத் தரப்புகளால் முன்னெடுக்கப்படும் முயற்சிகளில், இந்திய மத்திய அரசு தனது முதன்மையான பணிகளை ஆற்ற முன்வரவேண்டுமென்ற எதிர்பார்ப்பை எமது இனத்தின் கோரிக்கையாக தங்களிடம் முன்வைக்கிறேன்.

இந்திய தேசத்தின் வரலாற்றுப் பக்கங்களில் தனித்துவம் மிக்க தலைவராக, தொடர்ந்து மூன்றாவது முறையாகவும் மக்கள் ஆணைபெற்று, பாரதப் பிரதமராக ஆட்சிபீடம் ஏறியிருக்கும் தங்களின் பணிகள், இந்திய மற்றும் ஈழ தேசங்களின் நலனுக்கான வரலாற்றுப் பணிகளாய் அமைய வாழ்த்தி நிற்கிறேன்- என்றுள்ளது.

## கொழும்பில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இன்று காலை கொழும்பு கோட்டையிலிருந்து எந்தவொரு தொடருந்தும் புறப்படாதென தொழிற்சங்கத்தின் செயலாளர் சேனாநாயக்க தெரிவித்தார்.

## ஸ்டார் லிங்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மாநாட்டின் உயர்மட்ட அமர்வில் கலந்துகொண்ட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, உலகப் புகழ்பெற்ற வர்த்தகரான எலோன் மஸ்கை சந்தித்தார். இந்தச் சந்திப்பின் போது 'ஸ்டார் லிங்' வலையமைப்புடன் இணைப்பதற்கான விண்ணப்ப செயல்முறையை விரைவுபடுத்துவது குறித்து கலந்துரையாடப்பட்டது.

இதற்கமைய, செய்மதி தொழில்நுட்பம் மூலம் இணைய வசதி சேவையை வழங்க அனுமதி அளிக்கப்பட்டது.

உலகம் முழுவதும் சுமார் 2000 ஸ்டார்லிங்க் வலையமைப்பு மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. மேலும் 32 நாடுகளில் ஏற்கனவே அதிவேக இணைய வசதி வழங்கப்பட்டுள்ளது.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்று முதல் ஸ்டார்லிங்க் நிறுவனத்துடன் இணைந்து செய்மதி தொழில்நுட்பம் மூலம் இணைய வசதிகளைப் பெற்று, தொழில்நுட்பத் துறையில் புதிய மாற்றத்தை ஏற்படுத்த இருக்கிறோம்.

இதுவரை கோபுரங்கள் ஊடாக வழங்கப்பட்ட குறைந்த அளவிலான இணைய வசதிகளுக்குப் பதிலாக, இந்த செய்மதி தொழில்நுட்ப இணைய வசதி மூலம் எங்கிருந்தும் இணைய வசதியைப் பெற முடியும். இதன் ஊடாக தொழில்நுட்பத் துறையில் மாற்றம் ஏற்பட்டு வருகிறது. மாணவர்கள், ஆய்வாளர்கள், மீனவர்கள் ஆகியோருக்கு இந்த இணையதள வசதி பெரும் வசதியாக உள்ளது. இந்த தொழில்நுட்பத்தின் மூலம் அதிவேக இணைய வசதியை பெற முடியும். ஸ்டொர்லிங்கிற்கு செய்மதி தொழில்நுட்ப இணைய வசதியை வழங்க இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு ஒப்புதல் அளித்துள்ளது. பொதுமக்கள் கருத்து தெரிவிக்க 14 நாட்கள் கால அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது. பொது மக்களின் கருத்துக்கள் பெறப்பட்டு இரண்டு வாரங்களுக்குள் தேவையான நடவடிக்கைகள் எடுக்க எதிர்பார்க்கப்படுகிறது.

தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் 22ஆவது பிரிவின் கீழ், செய்மதி தொழில்நுட்பத்தின் மூலம் இவ்வாறு இணைய வசதிகளை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது. பாடசாலை மாணவர்கள், மீனவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு இந்த இணைய சேவையைப் பெற்றுக் கொள்வதற்காக நிவாரணப் பொதியை வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார். எதிர்காலத்தில் அதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டும்' என்றார்.

## மின்சார ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இன்று விவாதத்துக்குஎடுத்துக்கொள்ளப்படவுள்ள நிலையில் துறைசார் மேற்பார்வை குழுவின் தலைவர் சபைக்கு சமர்ப்பிக்க வேண்டிய பரிசீலனை அறிக்கையை விடயதானத்துக்கு பொறுப்பான அமைச்சர் நேற்று சபைக்கு சமர்ப்பித்துள்ளார்.

நிறைவேற்றுத்துறையின் கட்டளைகளுக்கு அமையவே சட்டவாக்கத்துறை தற்போது செயற்படுகிறது. இந்தச்சட்டமூலத்தை முழுமையாக ஆராய்ந்து விவாதம் செய்வதற்கு போதுமான காலம் வழங்கப்படவில்லை. இந்த சட்டமூலத்தில் 54 ஏற்பாடுகள் காணப்படுகின்ற நிலையில் அவற்றில் பெரும்பாலான சரத்து விதிகள் அரசமைப்புக்கு முரண் என்று உயர்நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் அரசியலமைப்பின் 12(1) பிரிவின் விதிகளை மீறும் வகையில் ஒருசில ஏற்பாடுகள் காணப்படுவதாகவும் நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது. ஆகவே, இதனை அலட்சியப்படுத்த முடியாது. சட்டமூலத்தை முழுமையாக ஆராய்ந்து முறையான மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என்றார்.

இதன்போது எழுந்து உரையாற்றிய மின்சாரத்துறை மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர, சட்டம் படித்தவர்கள் என்று குறிப்பிட்டுக்கொள்பவர்கள் உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள 11 பக்க வியாக்கியானத்தை தெளிவாக ஆராயாமல் இருப்பது வேடிக்கையாக உள்ளது என்றார்.

நீதிமன்றம் முன்வைத்துள்ள திருத்தங்களை செயற்படுத்துவதாக அறிவித்துள்ளோம். அத்துடன் நாடாளுமன்ற துறைசார் மேற்பார்வை குழுவும் பல திருத்த யோசனைகளை முன்வைத்துள்ளது. திருத்த யோசனைகளை நாங்கள் செயற்படுத்துவோம்.

இந்தச்சட்டமூலத்தை விவாதிக்க நேரம் போதாது என்று எதிர்க்கட்சிகள் குறிப்பிடுகிறார்கள். இவர்கள் இதனை நாடாளுமன்ற அலுவல்கள் தொடர்பான குழுவில் குறிப்பிட்டு விவாதத்துக்கான மேலதிக நேரத்தை பெற்றுக்கொண்டிருக்கலாம். குழுவில் ஒன்றும் பேசாது, சபையில் வந்து ஊடகங்களுக்காக எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள் என்று மேலும் தெரிவித்தார்.

இதன்போது எழுந்து உரையாற்றிய நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க, ஏதேனும் சட்டமூலத்தை நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தும் அதிகாரம் நாட்டு மக்களுக்கு உண்டு. தற்போது இரண்டாம் வாசிப்புக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள மின்சார சபை மறுசீரமைப்பு சட்டமூலம் தொடர்பில் உயர்நீதிமன்றம் வியாக்கியானம் முன்வைத்துள்ளது.

மின்சார சபையின் தனியுரிமையை நீக்கி போட்டித்தன்மையுடன் செயற்படும் சூழலை ஏற்படுத்தும் வகையில் இச்சட்டமூலத்தில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த சட்டமூலத்தை விவாதத்துக்கு எடுத்துக்கொள்வதைத் தடுப்பதற்கு எதிர்க்கட்சிகள் ஆரம்பத்திலிருந்து செயற்பட்டன. எதிர்க்கட்சியினரின் நோக்கங்களுக்கு இடமளிக்க முடியாது என்றார்.

எதிரணியின் சுயாதீன உறுப்பினர் கெவிந்து குமாரதுங்க பேசும்போது, இந்தச்சட்டமூலத்தை தொழில்நுட்ப ரீதியில் ஆராய வேண்டும். சட்டமூலம் தொடர்பில் உயர்நீதிமன்றம் பல திருத்தங்களை முன்வைத்துள்ளது. ஒரு சில திருத்தங்களுக்கு நீதிமன்றம் மாற்று தீர்மானத்தை அறிவிக்கவில்லை. நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை உள்ளது என்று குறிப்பிடுகின்றீர்கள். அவ்வாறாயின், ஏன் அவசரப்படுகின்றீர்கள் என ஆளும் தரப்பினரை நோக்கி கேள்வி எழுப்பினார்.

இதன்போது எழுந்து உரையாற்றிய ஆளும் தரப்பின் உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே, இந்த சட்டமூலம் அவசரமாக கொண்டு வந்ததல்ல. இவ்விடயம் தொடர்பில் விடயதானத்துக்கு பொறுப்பான அமைச்சர் தெளிவுபடுத்தல் மற்றும் யோசனைகளை பெற்றுக்கொள்வதற்காக ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளுக்கு அழைப்பு விடுத்தார். ஆனால், எவரும் கலந்துகொள்ளவில்லை. இங்குவந்து போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறார்கள். இரண்டு நாள் விவாதம் வேண்டும் என்றால் அதனை கட்சித்தலைவர் கூட்டத்தில் குறிப்பிட்டிருக்கலாமே? என்றார்.

எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல, இருநாள் விவாதம் வேண்டும் என்று கட்சித் தலைவர் கூட்டத்தில் நான் வலியுறுத்தினேன். ஆனால், ஆளும் தரப்பு அதற்கு இடமளிக்கவில்லை.

நாட்டின் வளங்கள் தொடர்பில் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் ஆளும் தரப்புக்குக் கிடையாது. நாட்டை வங்குரோத்து செய்துவிட்டு தற்போது வெட்கமில்லாமல் அரச வளங்களை விற்கிறார்கள். வெட்கம் என்பதொன்று உங்களுக்கு இல்லையா? வெட்கமில்லாமல் இன்றும் ஏன் ஆளும் தரப்பில்

தொடர்ச்சி 9ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# வடமாகாண ஆளுநர் சாள்ஸீடன் ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி சந்திப்பு





ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் என்ட்ரோ பிரஞ்ச் உள்ளிட்ட குழுவினர் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸை புதன்கிழமை சந்தித்து கலந்துரையாடினர்.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் இந்த கலந்துரையாடல் நடைபெற்றது.

வட மாகாண ஆளுநரின் செயலாளர், வடக்கு மாகாண பிரதம செயலாளர், யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர், மாவட்ட செயலாளர் (காணி), மாகாண காணி ஆணையாளர், யாழ். பிராந்திய பாதுகாப்பு படைகளின் உயர் அதிகாரிகள் என பலர் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

வடக்கு மாகாணத்தின் பொருளாதாரம், கல்வி, விவசாயம், தொழிற்துறை ஊக்குவிப்பு, காணி விடுவிப்பு, கண்ணிவெடி அகற்றும் பணி, மீள்குடியேற்றம், இயற்கை வளங்கள், முதலீட்டுத் திட்டங்கள், முன்னுரிமைபடுத்தப்பட வேண்டிய செயற்பாடுகள், பாதுகாப்புத் துறையினரின் செயற்பாடுகள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோருக்கான ஒத்துழைப்புகள் அதிகம் தேவைப்படுவதாக வடக்கு மாகாண ஆளுநர் குறிப்பிட்டார். அவர்களுக்கான உள்ளூர், ஏற்றுமதி சந்தை வாய்ப்புகள் பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும் எனவும், நவீன தொழில்நுட்ப பயிற்சிகள் வழங்க வேண்டும் எனவும் வடக்கு மாகாண ஆளுநர் கூறினார்.

அத்துடன் புலம்பெயர் உறவுகள், வடக்கிலுள்ள தொழில் முனைவோருக்கான ஒத்துழைப்புகளை வழங்கி அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

புலம்பெயர் உறவுகளால் வடக்கு மாகாண மக்களின் பொருளாதார முன்னேற்றத்துக்கு உதவ முடியும் என குறிப்பிட்ட ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் என்ட்ரோ பிரஞ்ச், முன்னுரிமை வழங்கவேண்டிய திட்டங்களை அடையாளம் கண்டு, அவற்றில் முதலீடுகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார். அத்துடன், சிறந்த பொறிமுறையின் ஊடாக முதலீடுகளை மேற்கொள்வது சிறந்தது எனவும் அவர் தெரிவித்தார். வடக்கில் காணப்படும் இயற்கை சக்தி வளங்களை பயன்படுத்தி பாரிய திட்டங்களை மேற்கொள்ளும்போது பிரதேச மக்களின் நலன்கள் குறித்தும் ஆய்வுகள் மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் கூறினார்.

மேலும், இயற்கை சக்தி வளங்களை பயன்படுத்தி மேற்கொள்ளும் திட்டங்களில் பெற்றுக்கொள்ளும் இலாபத்தில் அந்தந்த கிராம அபிவிருத்திக்கென ஒருதொகை நிதி ஒதுக்கப்பட வேண்டும் எனவும் ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளர் தெரிவித்தார்.

காணி உரித்துகள் வழங்கப்படுகின்றமை வரவேற்கப்பட வேண்டிய விடயம் எனவும் ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளர் தெரிவித்தார். அத்துடன் வடக்கு மாகாண அபிவிருத்திக்கு சர்வதேச சமூகத்திடமிருந்து எவ்வாறான ஒத்துழைப்புகள் தேவை எனவும் அவர் இதன்போது வினவினார்.

மக்களின் மீள்குடியேற்ற நடவடிக்கையை நிறைவு செய்ய கண்ணிவெடி அகற்றும் பணிகள் நிறைவு செய்யப்பட வேண்டும் எனவும், இதற்கான ஒத்துழைப்புகளை பெற்றுக்கொடுப்பது அவசியம் எனவும் ஆளுநர் கூறினார். அத்துடன் ஐக்கிய நாடுகள் அமைப்பின் கீழ் செயற்படும் சர்வதேச அமைப்புகள் வடக்கில் இதுவரையில் மேற்கொண்ட செயற்பாடுகளுக்கு நன்றி தெரிவித்த ஆளுநர், அனைத்து துறைகளுக்குமான அபிவிருத்திக்கு தேவையான ஒத்துழைப்புகளை தொடர்ந்தும் எதிர்பார்ப்பதாக தெரிவித்தார்.

(05)





# யானை தாக்கி ஒருவர் சாவ் ஒரு வாரத்தில் மூவர் இறப்பு

கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மஜீத் நகர் பகுதியில் வேளாண்மை காவல் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஒருவர் காட்டு யானை தாக்கியதில் 04 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

கிண்ணியா பூவரசந்தீவை சேர்ந்த வெல்லாங்குளத்தில் வசித்து வந்த முஹைதீன் பிச்சை முகம்மது அனிபா (வயது 61) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இதேவேளை வேளாண்மை காவலில் ஈடுபட்ட ஏனைய மூன்று விவசாயிகளும் யானையின் பிடியிலிருந்து தப்பித்துள்ளனர்.

இவ்வாறு மரணமடைந்தவர் 5 பிள்ளைகளின் தந்தை எனவும், அவரது வீட்டிலிருந்து யானையை துரத்திச் சென்றபோது இரவு 9 மணியளவில் யானைத் தாக்குதலுக்கு இலக்கானதாகக் குறிப்பிடப்படுகின்றது.

குறித்த பகுதியில் சிறு போக நெற்பயிர்ச் செய்கை இடம்பெற்று வருவதால் அங்கு வருகை தரும் யானைகள் அங்குள்ள குடியிருப்புப் பகுதிகளுக்கும் நுழைந்து அச்சுறுத்துவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த நபரைத் தாக்கிய யானை அங்குள்ள வீடு ஒன்றையும் சேதப்படுத்திச் சென்றுள்ளது. வீட்டை யானை தாக்க வருவதை முன்கூட்டியே அறிந்து கொண்ட அவர் பக்கத்து வீட்டில் தஞ்சமடைந்ததாகக் குறிப்பிடுகின்றனர்.

குறித்த ஓலை வீட்டை யானை முற்றாகத் தாக்கிய பின்னர் அங்கு அமைக்கப்பட்டு வந்த கட்டடம் ஒன்றையும் உடைத்து அதனுள் வைக்கப்பட்டிருந்த நெல்லையும் சாப்பிடுச் சென்றுள்ளது.

அப் பகுதியில் ஒரு வாரத்திற்குள் 3 பேர் யானைத் தாக்குதலுக்கு இலக்காகி உள்ளனர்.

அத்துடன் கிராமப்புற மக்களில் வாழ்வாதார பயிர்களான தென்னை வாழை கரும்பு முதலான பயிர்களையும் துவசம் செய்து வருகின்றனர்.

இக்காட்டு யானைகளை தடை செய்வதற்கு மின்சார வேலிகள் இடப்பட்டு போதிலும் அவற்றை பொருட்படுத்தாது யானைகள் கிராமத்துக்குள் புகுகின்றன.

எனவே, இக்காட்டு யானைகளை கட்டுப்படுத்துவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் தெரிவிக்கின்றனர்.

உயிரிழந்தவரின் மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிண்ணியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# மன்னார் வைத்தியசாலைக்கான அபிவிருத்திக் குழு தெரிவானது

*மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கான அபிவிருத்தி குழு கடந்த பல வருடங்களாகச் செயற்படாதிருந்த நிலையில் தற்பொழுது புதிய நிர்வாகக் குழு தெரிவு செய்யப்பட்டுள்ளது.*

*மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் இருக்கின்ற ஆளணிகளைக் கொண்டு அதிகாரிகள் தங்கள் கடமைகளை முன்னெடுத்து வருகின்றபோதும் இவ்வைத்தியசாலையில் பல தேவைகளும் , ஆளணி பற்றாக்குறைகளும் காணப்பட்டு வருகின்றது என பலராலும் சுட்டிக்காட்டப்பட்டு வந்தன.*

*இருந்தபோதும் கடந்த பல வருடங்களாக மன்னார் மாவட்டத்தில் மிகவும் முக்கியம் வாய்ந்த இவ்வைத்தியசாலைக்கு என அபிவிருத்திக்குழு ஒன்று இயங்காதிருந்து வந்ததும் பலரால் நீண்டகாலமாகச் சுட்டிக்காட்டப்பட்டு வந்ததும் இங்குக் குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் தற்பொழுது இந்த வைத்தியசாலை அபிவிருத்தி குழுவின் செயற்பாடுகள் மீண்டும் ஆரம்பமாகியுள்ளது.*



*இதற்கான புதிய நிர்வாகிகள் தெரிவுக்கான கூட்டம் செவ்வாய்க்கிழமை மாலை 2.30 மணியளவில் மன்னார் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் அலுவலகத்தின் கேட்போர் கூடத்தில் மாவட்ட பொது வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி எம்.எச்.முஹமட் ஹனிபா தலைமையில் நடைபெற்றது.*

*-இதன்போது இக்கூட்டத்தில் மன்னார் பொது வைத்தியசாலைக்கான புதிய அபிவிருத்திக்குழு தெரிவு இடம்பெற்றது.*

*இதில் தலைவராக வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி எம்.எச்.முஹமட் ஹனிபா , செயலாளராக எஸ்.ஜேம்ஸ் ஜேசுதாசன் (முன்னாள் மன்னார் நகர சபை உப தவிசாளர் மற்றும் ஓய்வுநிலை நிர்வாக உத்தியோகத்தர் ) , பொருளாளராக ஜனாப் என்.நூர்தீன் நூன் (வர்த்தகர் ) , உப தலைவராக திருமதி றெஜினா இராமலிங்கம் (ஓய்வுநிலை முன்னாள் கல்வி உதவிப் பணிப்பாளர் ) , உப செயலாளராக ஜனாப் எம்.ஐ.ஏ.றசாக் (சமூகப் பணியாளர் ) ஆகியோர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.*

*நிர்வாக உறுப்பினர்களாக எஸ்.பத்திநாதன் (போதகர் ) அழகிரி சூரியகுமார் (அதிபர் ) ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.*

*அத்துடன் இந்நிர்வாகத்தில் பதவிவழி உறுப்பினர்களாக -*

*மனோகரன் பிரதீப் ( பிரதேச செயலாளர் மன்னார் நகரம் )*

*ஒ. றெனால்ட் லெம்பேட் ( செயலாளர் , நகர சபை மன்னார் )*

*சு.நிர்மலன் லெம்பேட் ( தொழில்நுட்ப அலுவலர் , கட்டடங்கள் திணைக்களம் மன்னார் )*

*புஸ்பகாந்தன் ஜோண் ( பொது வைத்திய நிபுணர், மாவட்ட பொது வைத்தியசாலை மன்னார் )*

*அனஸ்லி றொகான் ( கணக்காளர் , மாவட்ட பொது வைத்தியசாலை மன்னார் )*

*சீ.வை குஷரூஸ் (தாதிய பரிபாலகர் , மாவட்ட பொது வைத்தியசாலை , மன்னார் ) ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.* *(05)*

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## நிறைவேற்று அதிகாரத்தை முறைகேடாக பயன்படுத்தியவருக்கு என்ன தண்டனை?

இலங்கையின்அரசுத்தலைவர்கள்நியாயஎல்லைகளுக்கு வெளியே தான்தோன்றித்தனமாகச் செயற்படமுடியாது என்பதை மீண்டும் ஒரு தடவை நிரூபித்திருக்கிறது உயர் நீதிமன்றம். அரசுத் தலைவரின் நிறைவேற்று அதிகாரம் சவாலுக்கு உட்படுத்தப்படமுடியாத ஒன்றல்ல என்பதையும் நீதிமன்றம் ஆணித் தரமாக எடுத்து வைத்திருக்கின்றது.

கொழும்பு றோயல் பார்க்கில் 19 வயது இளம் பெண் ஒருவரைக் கொலை செய்த குற்றவாளிக்கு மன்னிப்பு வழங்கி, முன்னாள் அரசுத்தலைவர் மைத்திரிபால சிறிசேன விடுதலை செய்தமை தவறு என்று தான் வழங்கிய தீர்ப்பின் மூலம்உயர்நீதிமன்றம்நிறைவேற்றதிகாரத்தின்எல்லைகளை மீண்டும் ஒரு தடவை தெளிவுபடுத்தியிருக்கிறது.

இந்தக் கொலையில் குற்றவாளி என்று தீர்ப்பளிக்கப்பட்ட சம்பத் ஜுட் அன்ரனி ஜயமஹா என்ற இளைஞருக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. ஆனால், அரசியல் செல்வாக்குள்ள அவரது உறவினர்களின் தொடர்ச்சியான அழுத்தம்காரணமாககுற்றவாளியின்தூக்குத்தண்டனையை ஆயுள்தண்டனையாகக்குறைத்தமுன்னாள்அரசுத்தலைவர் மைத்திரிபால சிறிசேன, பின்னர் தனது நிறைவேற்று அதிகாரத்தைப் யன்படுத்து அவரைத் தண்டனையில் இருந்து முழுமையாக விடுவித்தார்.

அதனை எதிர்த்துத் தொடுக்கப்பட்ட வழக்கிலேயே உயர் நீதிமன்றம் நிறைவேற்றதிகாரத்தின் அளவுக்கு மீறி நீண்ட சிறகுகளை வெட்டியிருக்கிறது. இதனை உயர் நீதிமன்றம் ஏற்கனவே ஒரு தடவையும் செய்திருக்கின்றது. சுதந்திரக் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான பாரத பிரேமச்சந்திரவின் கொலை வழக்கில் குற்றவாளியான துமிந்த சில்வாவை இதுபோன்று முன்னாள் அரசுத் தலைவர் கோட்டாபய ராஜபக்ச விடுதலை செய்ததும் தவறி என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.

அதனடிப்படையில் துமிந்த சில்வா மீண்டும் சிறையில் அடைக்கப்பட்டு அவரது தண்டனை தொடர்கின்றது. ஆனால் மைத்திரி விடயத்தில் குற்றவாளி தப்பிவிட்டார். சிறையில் இருந்து விடுதலை பெற்ற றோயல் பார்க் கொலையாளி வெளிநாட்டுக்குச் சென்றுவிட்டார். அவரை மீண்டும் நாட்டுக்குக் கொண்டு வந்து தண்டனையை அவர் தொடர்ந்து அனுபவிக்க நடவடிக்கை எடுக்கும்படி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. ஆனால், அது எவ்வளவு தூரம் நடைமுறைச் சாத்தியமானது என்பது கேள்விக்குரியது. அத்தோடு அவரை இனி எப்போது கைது செய்து தண்டனை வழங்கப்படும் என்பது தெரியாது.

சிறைக்காவலில்இருக்கும்ஒருகைதியோகுற்றவாளியோ தப்பியோடினால் அதற்கான பொறுப்பு கைதிக்குப் பொறுப்பான சிறை அதிகாரியின் மீதே சுமத்தப்படும். கைதி மீண்டும் பிடிக்கப்படும்வரை காவலர் பணியை இழப்பார். றோயல் பார்க் வழக்கில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்தி குற்றவாளியைத் தப்ப விட்டிருக்கின்றார் என்பதே நீதிமன்றத்தின் தற்போதைய தீர்ப்பின் மூலம் அர்த்தப்படுத்தக்கூடிய விடயம். அப்படியென்றால் குற்றவாளியைத் தப்பவிட்ட, அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்திய மைத்திரிக்கு என்ன தண்டனை?

ஒரு காலத்தில் நிறைவேற்று அதிகார அரசுத் தலைவரால் எதைவேண்டுமானாலும் செய்யலாம் என்றிருந்த நிலை, நீதிமன்றத்தின் தற்போதைய தீர்ப்புக்களால் இல்லை என்றாகிவரும்நிலையில், தவறிழைக்கும்ஜனாதிபதிகளுக்கு என்ன தண்டனை என்பதைப் பற்றியும் சிந்திக்கவேண்டி இருக்கின்றது. நிறைவேற்று அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்துவதைத் தடுப்பதற்கு, அதனை முறைகேடாகப் பயன்படுத்தியவர்களைத் தண்டிப்பதும் மிக அவசியம். சட்டவாக்கத்துறையான நாடாளுமன்றம் இனிவரும் காலங்களில் இது குறித்தும் சிந்திக்கவேண்டியது அவசியம்.

## மற்றொரு போரின் விளிம்பில் இஸ்ரேல்



**நாகா**

'ஹிஸ்புல்லாக்கள் இங்கே நெருப்பு வைக்கிறார்கள். லெபனானில் உள்ள அவர்களது நிலைகளும் அதே போல் தீக்கிரையாக்கப்பட வேண்டும். அவர்கள் அனைவரும் அழிக்கப்பட வேண்டும். போர்தான் இதற்குத் தீர்வு!'

இஸ்ரேலுக்குள் ஹமாஸ் ஆயுதக் குழுவினர் கடந்த திங்கள்கிழமை ஏவுகணைகளை வீசி தாக்கியதைத் தொடர்ந்து, அந்த நாட்டுக்கான தேசிய பாதுகாப்பு விவகார அமைச்சர் பென் கிவிர் கூறியது இது.

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவும், 'எங்கள் நாட்டில் தாக்குதல் நடத்திவிட்டு, பதிலடியிலிருந்து தப்பிவிடலாம் என்று யாராவது நினைத்தால், அவர்கள் மிகப் பெரிய தவறு செய்கிறார்கள் என்று அர்த்தம். வடக்கு இஸ்ரேலின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக நாங்கள் எதை வேண்டுமானாலும் செய்வோம். எனவே, ஹிஸ்புல்லாக்களுக்கு எதிராக மிகக் கடுமையான நடவடிக்கையை எடுக்கத் தயாராகிவிட்டோம்' என்றார்.

ஹிஸ்புல்லாக்களுக்கு எதிரான இஸ்ரேலின் ராணுவ நடவடிக்கை திட்டம் எவ்வாறு இருக்கும் என்பதை அந்த நாட்டு நிதியமைச்சர் பெஸாலெல் ஸ்மாட்ரிச் கூறியதைக் கொண்டு ஓரளவு ஊகிக்க முடியும்.

'இஸ்ரேல் பகுதியிலிருந்து தெற்கு லெபனானின் கலீலி பகுதிக்கு தரைவழியாக தாக்குதல் நடத்தி முன்னேறவேண்டும். அந்தப்பகுதியை ஆக்கிரமித்து, ஹிஸ்புல்லா பயங்கரவாதிகளை விரட்டவேண்டும். அந்தப் பகுதியில் வசிக்கும் மக்களிடையேதான் ஹிஸ்புல்லாக்கள் ஒளிந்துள்ளனர். எனவே, பொதுமக்களையும் சேர்த்து அங்கிருப்பவர்கள் அனைவரையும் லிடானி நதிக்கு அப்பால் துரத்த வேண்டும்'' என்பதுதான் ஸ்மாட்ரிச் வெளியிட்ட திட்டம். அவர் கூறும் லிடானி நதியின் மறுகரை இஸ்ரேல் எல்லையிலிருந்து சுமார் 30 கி.மீ. தொலைவில் உள்ளது.

ஹிஸ்புல்லா அமைப்பும், இஸ்ரேலுடனான முழு போருக்குத் தயாராக இருப்பதாகக் கூறியுள்ளது. இது குறித்து அந்த அமைப்பின் துணைத் தலைவர் ஷேக் நயீம் காசிம் கூறுகையில், 'தற்போது இஸ்ரேலுக்கும்எங்களுக்கும்இடையேநடந்துவரும் மோதல் முழு போராக உருவெடுப்பதை நாங்கள் விரும்பவில்லை. இருந்தாலும், அத்தகைய ஒரு போர் வெடித்தால் அதை எதிர்கொள்வதற்கு முழு ஆயத்தமாக இருக்கிறோம். போரை இஸ்ரேல் விரிவுபடுத்தினால் மிகப் பெரிய அழிவை அந்த நாடு சந்திக்க வேண்டியிருக்கும்" என்று எச்சரித்தார்.

இந்த அறிக்கைகள், இஸ்ரேலுக்கும் ஹிஸ்புல்லாக்களும் இடையே முழு போர் வெடிப்பதற்கான அபாயத்தை வெளிப்படுத்துவதாகக் கூறப்படுகிறது.

ஏற்கெனவே, 'ஹிஸ்புல்லாக்களுடன் முழு போர் வெடித்தால் லெபனான் இன்னொரு காஸாவாகும்' என்று பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு எச்சரித்துள்ள நிலையில், இப்போது ஏற்பட்டுள்ள பதற்றச் சூழல் சர்வதேச நாடுகளுக்குக் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

காஸா போர் தொடங்கியதற்குப் பிறகு இஸ்ரேலுக்கும் ஹிஸ்புல்லாக்களுக்கும் இடையே ஏற்பட்டுள்ள சிறு மோதல்கள் முழு போராக உருவெடுப்பதைத் தடுப்பதற்காக தூதரக ரீதியில் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

இஸ்ரேலுடன் சமாதானம் செய்துகொள்ள ஹிஸ்புல்லாக்கள் தயாராக இருந்தாலும், அதற்கு காஸா மீதான தாக்குதலை இஸ்ரேல் நிறுத்த வேண்டும் என்று நிபந்தனை விதிக்கின்றனர். ஆனால், அதுதான் எட்டாக்கனியாகவே இதுவரை இருந்து வருகிறது.

இஸ்ரேலும் வடக்குப் பகுதியின் பாதுகாப்பை தூதரக ரீதியில் உறுதி செய்துகொள்ளத் தயார் என்று கூறுகிறது. ஆனால், அதற்காக ராணுவ ரீதியிலான தீர்வைக் கைவிடுவதற்கு அந்த நாடு தயாராக இல்லை.

இந்தச் சூழலில்தான் ஹிஸ்புல்லா அமைப்பும் இஸ்ரேலும் போரின் விளிம்புக்கு வந்துள்ளன.

இரு தரப்பினருக்கும் இடையே போர் நடப்பது இது முதல்முறை அல்ல. ஹிஸ்புல்லா அமைப்பு உருவாக்கப்பட்டதே இஸ்ரேலுக்கு எதிராகத்தான். லெபானானை ஆக்கிரமித்த இஸ்ரேல் படையினரை அங்கிருந்து விரட்டுவதற்காக 1982-இல் ஈரானால் உருவாக்கப்பட்ட ஹிஸ்புல்லா படை, சுமார் 18 ஆண்டுகளாக கொரில்லா போர் நடத்தி இஸ்ரேலை வெளியேற்றியது.

கடைசியாக இரு தரப்பினருக்கும் இடையே கடந்த 2006-இல் நடைபெற்ற 34 நாள் போரில் 270 ஹிஸ்புல்லாக்கள் உள்பட 1,200 லெபனான் நாட்டவர்கள் உயிரிழந்தனர்; 4,400 பேர் காயமடைந்தனர்; 9.74 லட்சம் பேர் வீடுகளை விட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது. அவர்களில் 2 லட்சம் பேர் இன்னும் கூட வீடு திரும்பவில்லை.

அந்தப் போரில் இஸ்ரேல் தரப்பில் 158 பேர் உயிரிழந்தனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் லெபனானில் கொல்லப்பட்ட படையினர். இது தவிர, ஹிஸ்புல்லாக்கள் நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் இஸ்ரேலில் 43 பேர் உயிரிழந்தனர்; 1,500 பேர் காயமடைந்தனர்; 7 லட்சத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் தங்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேறி தவித்தனர்.

அதன் பிறகு தற்போதுதான் அதேபோன்ற முழுமையான போர் இரு தரப்பினருக்கும் இடையே ஏற்படும் சூழல் உருவாகியுள்ளது. ஆனால், இப்போதைய நிலைமை முன்பைப் போல் இல்லை. 2006-க்குப் பிறகு ஹிஸ்புல்லா அமைப்பினர் தங்களது படைபலத்தை பல மடங்கு அதிகரித்துள்ளனர். அவர்களிடம் அதி நவீன ஆயுதங்கள், முன்பைவிட அதிக துல்லியமாக இலக்குகளைத் தாக்கக்கூடிய உயர் தொழில்நுட்ப ஏவுகணைகள், ஆயுததளவாடங்கள் குவிந்துள்ளன. எனவே, இந்த முறை முழு போர் வெடித்தால் இரு தரப்பிலும் மிகப் பெரிய உயிர்ச் சேதத்தையும் பொருள் சேதத்தையும் அது ஏற்படுத்தும் என்று அஞ்சப்படுகிறது.

அத்தகைய போரைத் தவிர்க்க அமெரிக்கா, பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகள் கடும் முயற்சி மேற்கொண்டு வந்தாலும், காஸா போர் தொடரும்வரை இஸ்ரேல் - ஹிஸ்புல்லா போர் அபாயமும் தொடரும் என்று கூறப்படுகிறது.

காலைக்கதிர் Kalaikkathir

# பொன். சிவகுமாரனின் 50ஆவது ஆண்டு யாழ்.பல்கலையிலும் நினைவேந்தல்







தமிழ்த் தேசத்தின் வரலாற்றில் மாணவப் போராளியாகப் போராடி தன்னுயிர் நீத்த முதல் தற்கொடையாளன் தியாகி பொன்.சிவகுமாரனின் 50 ஆவது ஆண்டு நினைவேந்தல் புதன்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொதுநினைவுத் தூபியில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள் உள்ளிட்டவர்களின் பங்கேற்புடன் உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப்பட்டது.

(05)





# உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பில் விழிப்புணர்வு நிகழ்வு

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு கிழக்கு மாகாணத்தில் சுற்றாடல் அமைச்சால் பல்வேறு விழிப்புணர்வு செயற்றிட்ட நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன. இந்நிலையில், மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதான சுற்றாடல் தின நிகழ்வு புதன்கிழமை மண்முனை மேற்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட ஈச்சந்தீவு இராமகிருஷ்ண மிஷன் வித்தியாலயத்தில் நடைபெற்றது. மாவட்ட சுற்றாடல் அதிகார சபையின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த விழிப்புணர்வு நிகழ்வில் பிரதம அதிதியாக மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.ஜே.முரளிதரன் கலந்துகொண்டார். உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு ஈச்சந்தீவு இராமகிருஷ்ண மிஷன் வித்தியாலயத்தில் சுற்றாடல் சார் கண்காட்சி இதன்போது நடைபெற்றது. மத்திய சுற்றாடல் அதிகார சபையின் உதவி பணிப்பாளர் டி.தர்மதாச தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பயனுறுதி மிக்க நில பயன்பாட்டின் ஊடாக 'நலம் மிகுந்த நாடு' எனும் கருப்பொருளுக்கு அமைவான கண்காட்சியை மாவட்ட அரசாங்க அதிபர் திறந்துவைத்தார்.

அதனைத் தொடர்ந்து பாடல், கலை கலாசார நிகழ்வுகளும் சுற்றாடல் சார்பான உரைகளும் இதன்போது நிகழ்த்தப்பட்டன. இந்த நிகழ்வில் மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் நமசிவாயம் சத்யானந்தி, மாவட்ட மத்திய சுற்றாடல் அதிகார சபையின் உயர் அதிகாரிகள், பாடசாலையின் ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

(05)





கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# பேருவலை கல்வித் தொகுதியில் நீண்டகாலமாக இருக்கும் ஆசிரியர் பற்றாக்குறையை போக்க நடவடிக்கை எடுக்குக

## இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் கோரிக்கை



களுத்துறை கல்வி வலயத்தில் உயர் தர வகுப்புகளுக்கு நீண்ட காலமாக இருந்துவரும் ஆசிரியர் வெற்றிடங்கள் இன்னும் நிரபப்பப்படாமல் இருந்து வருகின்றன. இது தொடர்பாக தேடிப்பார்த்து நிலவி வரும் ஆசிரியர் வெற்றிடங்களைப் பூர்த்தி செய்ய விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்க்கட்சி உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற நாட்டின் கல்வி நடவடிக்கைகள் தொடர்பான பிரச்சினை தொடர்பில் சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து குறிப்பிடுகையில் -

களுத்துறை கல்வி வலயத்திலிருந்து வரும் பாரிய ஆசியர் பற்றாக்குறை தொடர்பாகப் பல தடவைகள் அமைச்சருக்கு எடுத்துரைக்கும்போது அதற்கு சிறந்த முறையில் பதில் வழங்கப்பட்டபோதும் செயற்பாட்டில் திருப்தியளிக்கும் வகையில் எந்த பதிலும் இதுவரை கிடைக்கப்பெறவில்லை. களுத்துறை கல்வி வலயத்தில் பேருவலை தொகுதியில் மாத்திரம் நூற்றுக்கு 36 வீத ஆசிரியர் பற்றாக்குறை இருந்து வருகிறது. அதாவது, நூறுபேர் இருக்கவேண்டிய இடத்தில் 36 பேர் இல்லை.

பேருவலை தொகுதியில் கல்வி பொதுத்தராதர உயர்தர வகுப்புகளுக்கு கணித, விஞ்ஞான 14 பட்டதாரி ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுகின்றன. 10, 12 வருடங்களாக இந்த ஆசிரியர் பற்றாக்குறை இருந்து வருகிறது. அவ்வாறாயின் இந்த மாணவர்கள் எவ்வாறு பரீட்சைகளுக்கு முகம்கொடுக்க முடியும்? இதுதொடர்பாக தேடிப்பார்க்குமாறு அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று பேருவலை தொகுதியில் 52 ஆங்கில ஆசிரியர் வெற்றிடங்கள் இருந்து வருகின்றன. அது களுத்துறை வலயத்தில் 92ஆக இருந்து வருகிறது. கல்வியியற் கல்லூரிகளிலிருந்து வெளிவரும் ஆசிரியர்களை இந்த பாடசாலைகளுக்கு நியமிப்பதாக அமைச்சர் தெரிவித்து வருகின்றபோதும் இந்த பிரதேசங்களைச் சேர்ந்தவர்களையும் வேறு பிரதேசங்களுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கி அனுப்புகிறார்கள்.

இவ்வாறான தீர்மானங்களை யார் எடுக்கிறார்கள் என்று தெரியாது. அந்த ஆசிரியர்கள் இங்கிருந்து பல மணி நேரம் பயணித்து அந்த பாடசாலைகளுக்குச் செல்லவேண்டிய நிலை இருக்கிறது. இந்த ஆசிரியர்கள் மனத் திருப்தி இல்லாமலே இந்த சேவையைச் செய்து வருகின்றனர்.

எனவே நீண்டகாலமாக இந்த பிரதேசத்திலிருந்துவரும் ஆசிரியர் பற்றாக்குறை தொடர்பாகத் தேடிப்பார்த்து, இதற்குத் தீர்வுகாண அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். - என்றார்.

(05)

# 28 மில்லியன் ரூபா பெறுமதியான கேரள கஞ்சாவுடன் இருவர் கைது

வட கடலில் வைத்து சுமார் 28 மில்லியன் ஷரூபா பெறுமதியான கேரள கஞ்சாவுடன் இரண்டு சந்தேகநபர்களை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம் பகுதியைச் சேர்ந்த 34 மற்றும் 40 வயதுடைய இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

அங்கு அவர்களிடம் இருந்து 70 கிலோ கேரள கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது.

இதன் பெறுமதி 28 மில்லியன் ரூபாவை அண்மித்துள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது.

கேரள கஞ்சாவை படகில் ஏற்றிச் சென்ற போது கடற்படையினர் அவர்களை கைது செய்தனர்.

மேலதிக விசாரணைகளுக்காக கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சா மற்றும் படகும் மருதங்கேணி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(05)

# 15 பெண்கள் உட்பட 716 பேர் போதைப்பொருள்களுடன் கைது

*நாடளாவிய ரீதியில் செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது போதைப்பொருள்களுடன் 15 பெண்கள் உட்பட 716 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.*

*கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களில் 31 பேர் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.*

*கைதானவர்களில் போதைப்பொருள்களுக்கு அடிமையாகியுள்ள 14 பேரை புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.*

*இந்நிலையில், விசாரணையின் போது சந்தேக நபர்களிடமிருந்து 123 கிராம் ஹெரோயின், 270 கிராம் ஐஸ், கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.*

*(05)*



## மைத்திரியின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜொன்சன் எனும் 19 வயது யுவதியைக் கொலை செய்தமை தொடர்பில் குற்றவாளியாகக் காணப்பட்ட ஜூட் சமந்த ஜயமஹவிற்கு 2012ஆம் ஆண்டு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.

2019ஆம் ஆண்டு ஜனாதிபதி பொதுமன்னிப்பின் கீழ் அவர் விடுதலை செய்யப்பட்டார். ஜனாதிபதியின் இந்தச் செயலை எதிர்த்துத் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான தீர்ப்பு நேற்று வழங்கப்பட்டது. ஜனாதிபதியின் பொது மன்னிப்பு தவறு என்று தீர்ப்பளித்த நீதிமன்றம், தண்டனையைத் தொடரவும் உத்தரவிட்டது.

## ஞாயிறன்று.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யஜேந்திரன் தலைமையில் வைத்தீஸ்வரா கல்லூரி, நல்லூர் தொகுதி பிரதம அமைப்பாளர் அ. கிருபாகரன் தலைமையில் சென். பெனடிக்ற் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கு தலா 11 லட்சம் பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறைகளை வழங்கிவைப்பார்.

எதிர்வரும் திங்கட்கிழமை (10) பருத்தித்துறை மற்றும் உடுப்பிட்டி தொகுதிகளுக்கு செல்லும் எதிர்க்கட்சித் தலைவர், கொற்றாவத்தை அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி ஆகிய பாடசாலைகளுக்கு தலா 11 லட்சம் பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறைகளை வழங்கி வைப்பார். அன்றைய தினம் காங்கேசன்துறை தொகுதி பிரதம அமைப்பாளர் வன்னியசிங்கம் பிரபாகரன் தலைமையில் அளவெட்டி அருணோதயா கல்லூரிக்கு 11 லட்சம் பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறையை அன்பளிப்பு செய்யவுள்ளார்.

எதிர்வரும் செவ்வாய்கிழமை (11) எதிர்க்கட்சித் தலைவர், ஊர்காவற்துறை தொகுதி பிரதம அமைப்பாளர் குருபரன் மதன்ராஜ் தலைமையில் நெடுந்தீவு மகாவித்தியாலம், மானிப்பாய் தொகுதி அமைப்பாளர் அனோஜன் அருந்தவநாதன் தமையில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, புனித. ஹென்றியரசர் கல்லூரி இளவாலை ஆகிய பாடசாலைகளுக்கு தலா 11 லட்சம் பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறைகளை வழங்கிவைப்பார்.

எதிர்வரும் புதன் (12) கோப்பாய் தொகுதிக்கு விஜயம் செய்யும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச , நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரிக்கு 11 லட்சம் பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறையை அன்பளிப்பு செய்யவுள்ளார். தொடர்ந்து வட்டுக்கோட்டை தொகுதி பிரதம அமைப்பாளர் சதாசிவன் தலைமையில் வட்டுக்கோட்டை யாழ்ற்ரன் கல்லூரி காரைநகர் பாடசாலைக்கு 11 லட்சம் பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறையை அன்பளிப்பு செய்யவுள்ளார்.

மேலும் சுழிபுரம் விக்டோரியா கல்லூரிக்கு செல்லும் எதிர்க்கட்சித் தலைவர், பேருந்து ஒன்றை அன்பளிப்பு செய்யவுள்ளார்.

எதிர்வரும் வியாழக்கிழமை (13) சாவகச்சேரி தொகுதி பிரதம அமைப்பாளர் கந்தையா மயில்வாகனம் தலைமையில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி, கிளிநொச்சி தொகுதி அமைப்பளர் மொகமட் காசிம் தலைமையில் இரணைதீவு றோ. க. த. க ஆகிய பாடசாலைகளுக்கு தலா 11 லட்சம் பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறைகளை வழங்கிவைப்பார்.

நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன மற்றும் கட்சியின் பிரதிச் செயலாளர் உமாச்சந்திரா பிரகாஷ் ஆகியோருடன் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் பல சமூக, அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தனது விஜயத்தின்போது, அரசியல் தலைவர்கள், புத்திஜீவிகள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் பலரைச் சந்திக்கவுள்ளார்.



காலைக்கதிர் Kalaikkathir

# யாழ்ப்பாணத்தில் 2001 ஆம் ஆண்டு அரசியல் பேரணியில் நடந்த வன்முறை தொடர்பில் லண்டனில் ஒருவர் கைது

2001 இன் பிற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் அரசியல் பேரணியில் இடம்பெற்ற வன்முறை சம்பவம்தொடர்பில் ஒருவரை கைதுசெய்யதுள்ளதாக லண்டன் மெட்ரோபொலிட்டன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

2000 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இலங்கையின் உள்நாட்டு யுத்தத்துடன் தொடர்புடைய யுத்த குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணைகளை மேற்கொண்டுவரும் பயங்கரவாத எதிர்ப்பு துப்பறியும் பிரிவினர் தங்களின் விசாரணைகளிற்கு உதவக்கூடிய தகவல்கள் உள்ளவர்களை விசாரணைக்கு உதவுமாறு லண்டன் மெட்ரோபொலிட்டன் பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்த விவகாரம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுள்ள பயங்கரவாத எதிர்ப்பு பொலிஸார் ஐக்கிய இராச்சியத்தை சேர்ந்த இரண்டாவது நபரை கைதுசெய்துள்ள நிலையிலேயே இந்த வேண்டுகோள் வெளியாகின்றது.

இந்தக் குற்றங்கள் பாதிக்கப்பட்டவர்களிற்கும் சாட்சிகளிற்கும் நிரந்தர பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன எனத் தெரிவித்துள்ள லண்டன் மெட்ரோபொலிஸ் தளபதி டொமினிக் மேர்பி இது குறித்த விசாரணைகளின் ஒரு பகுதியாக இருவரை இதுவரை கைதுசெய்துள்ளோம் எனத் தெரிவித்துள்ளார். இந்த பாரதூரமான குற்றங்கள் குறித்து விசாரணைகளை மேற்கொண்டுள்ள அதிகாரிகள் தங்கள் நடவடிக்கைகளில் முன்னேற்றங்களை சந்தித்துள்ளனர் என்பதற்கான அறிகுறி இது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஏனைய பாரதூரமான சம்பவங்களை போல இந்தச் சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை மேலும் முன்னெடுப்பதற்கு கண்ணால் கண்ட சாட்சியங்கள் அவசியம் என குறிப்பிட்டுள்ள அவர் இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின போது இந்த சம்பவம் குறித்து தகவல்கள் உள்ளவர்கள் உள்ளனர் என்பது எங்களிற்கு தெரியும் அவர்கள் இன்னமும் விவரங்களைத் தெரிவிக்க முன்வரவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்த விவரங்கள் உள்ளவர்களை பொலிஸாரை தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம் நாங்கள் உங்களிற்கு ஆதரவளிப்போம் நீங்கள் வழங்கும் தகவல்கள் இரகசியமாக பேணப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விசாரணைக்கு உதவக்கூடிய நேரடித் தகவல்கள் உள்ளவர்களை சந்திப்பதற்கு அதிகாரிகள் ஆர்வமாக உள்ளனர். குறிப்பாக 2000 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இலங்கையில் வாழ்ந்தவர்கள் எனத் தெரிவித்துள்ள டொமினிக் மேர்பி இலங்கையில் அந்த நாள்களில் உறவினர்கள் வசித்தவர்கள் - பின்னர் அந்த உறவினர்கள் இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்தவர்களும் தொடர்புகொள்ளலாம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

2001 சர்வதேச குற்றவியல் நீதிமன்ற சட்டத்தின்படி 2023 ஆம் ஆண்டு நவம்பர் 21 ஆம் திகதி லண்டனின் தென்பகுதியில் வசித்த 60 வயது நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என தெரி வித்துள்ள லண்டன் மெட்ரோபொலிட்டன் பொலிஸார் அவர் பொலிஸாரின் தடுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார் பிணையின் கீழ் உள்ளார்

இது 2001 இன் பிற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் அரசியல் பேரணியில் இடம்பெற்ற வன்முறை சம்பவம் தொடர்பானது இந்த சம்பவத்தில் இருவர் கொல்லப்பட்டனர் எனவும் தெரிவித்துள்ளனர். 2022 இல் பெப்ரவரியில் இதே குற்றத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் 48 வயது நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டார். இது 2000 ஆம் ஆண்டு ஊடகவியலாளர் நிமலராஜன் படுகொலை செய்யப்பட்டமையுடன் தொடர்புடையது எனவும் தெரிவித்துள்ளனர். விசாரணைகளின் கீழ் அவர் விடுதலை செய்யப்பட்டார் விசாரணைகள் இன்னமும் தொடர்கின்றன. 2017 இல் பயங்கரவாத பொலிஸின் யுத்த குற்ற பிரிவினரிடம் பாரப்படுத்தப்பட்ட சம்பவங்கள் தொடர்பானவையே இந்த குற்றங்கள் எனவும் தெரிவித்துள்ளனர (05)

# 14 புதிய இராஜதந்திரிகள் ஜனாதிபதி முன் பதவியேற்பு

இலங்கைக்கான புதிதாக நியமிக்கப்பட்ட 05 உயர்ஸ்தானிகர்கள் மற்றும் 09 தூதுவர்கள் புதன்கிழமை முற்பகல் கொழும்பு கோட்டை ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் தமது நற்சான்றுப் பத்திரங்களைக் கையளித்தனர்.

நியூஸிலாந்து, சைப்ரஸ் குடியரசு, மாலைதீவுகள், சியரா லியோன் குடியரசு மற்றும் மொரீஷியஸ் குடியரசு என்பவற்றுக்கான உயர்ஸ்தானிகர்களும் குவாத்தமாலா குடியரசு, அல்ஜீரியா மக்கள் ஜனநாயகக் குடியரசு, எஸ்டோனியா குடியரசு, லாவோஸ் மக்கள் ஜனநாயக குடியரசு, கொலம்பியா குடியரசு, துருக்கி குடியரசு, அயர்லாந்து, ஹெலனிக் குடியரசு (கிரீஸ்) மற்றும் பல்கேரியா குடியரசு ஆகிய நாடுகளின் புதிய தூதுவர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். (05)



## 10 தாவரவியல் பூங்காக்களை அமைக்க ஆளும் தரப்பு முடிவு

நாட்டின் காலநிலை வலயங்களை அடிபபடையாகக் கொண்டு 10 புதிய தாவரவியல் பூங்காக்களை அமைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகப் பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் உரையாற்றும் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு -

காலி, வவுனியா, அம்பாறை, பொலன்னறுவை மற்றும் தெனியாய உள்ளிட்ட பகுதிகளில் புதிய தாவரவியல் பூங்காக்களை அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் அந்தந்த பகுதிகளில் வாழும் மக்கள் மட்டுமன்றி நாட்டில் உள்ள அனைத்து மக்களும் மாணவர்களும் பயனடையக்கூடிய வகையில் இந்த பூங்காக்களை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரி வித்துள்ளார். (05)

## கனடாவுக்கு அனுப்புவதாகக் கூறி ரூ. 31 லட்சம்மோசடி ஒருவர் கைது



*கனடாவில் தொழிற்வாய்ப்பை பெற்றுத்தருவதாக இளைஞர் ஒருவரிடம் 31 லட்சம் ரூபா பணத்தை பெற்று, மோசடி செய்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*யாழ்ப்பாணம் - சாவகச்சேரி பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் கனடாவில் தொழில்வாய்ப்பை பெற்றுத்தருவதாக யாழ்ப்பாணத்தை சேர்ந்த இளைஞரிடம் இருந்து 31 லட்சம் ரூபா பணத்தைப் பெற்றுள்ளார்.*

*பணத்தை பெற்று நீண்ட நாள்களாகியும், இளைஞரை கனடாவுக்கு அனுப்புவதற்கான ஏற்பாடுகள் எதுவும் செய்யப்படாத நிலையில், இளைஞர் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.*

*முறைப்பாட்டின் அடிப்படையில் சாவகச்சேரி பகுதியை சேர்ந்த நபரை பொலிஸார் கைது செய்து, பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (05)*

## கல்வீச்சுத் தாக்குதலுக்கு இலக்கான இ.போ.ச. பஸ்

### சாரதி காயம்

காரில் சென்ற இனந்தெரியாத இருவர் வீதியில் பயணித்த பஸ்ஸின்மீது கல் எறிந்து தாக்கியதில் பஸ்ஸின் முன்புற கண்ணாடி உடைந்து, பஸ் சாரதி காயமடைந்த சம்பவம் வெலிகந்த பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து அக்கரைப்பற்று நோக்கிப் பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்ஸே கல்வீச்சுத் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது.

இதன்போது, பஸ்ஸின் முன்புற கண்ணாடி உடைந்து சிதறிய நிலையில், கண்ணாடித் துண்டுகள் தலையில் குத்தி பஸ் சாரதி காயமடைந்துள்ளார்.

காயமடைந்த சாரதி வெலிகந்த அரச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக பொலன்னறுவை அரச வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (05)

## மின்சார ....

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கின்றீர்கள். அட்டை பூச்சி போல் இன்றும் ஒட்டிக்கொள்கின்றீர்கள். விட்டுச் செல்லுங்கள் என்று கடுமையாக ஆளும் தரப்பினரை சாடினார்.

சபைமுதல்வர்சுசில்பிரேமஜயந்த, சட்டமூலத்தை தொடர்ந்து விவாதிக்க வேண்டுமாயின், கட்சித் தலைவர் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கலாம் என்றார். இதன்போது எதிர்தரப்பின் சுயாதீன உறுப்பினர் கெவிந்து குமாரதுங்க எதிர்ப்பு தெரிவித்துக்கொண்டிருந்தார்.

'நீங்கள் அமைதியாக இருங்கள், இறப்புச் சங்க தேர்தலில் கூட போட்டியிடாத இவர் நாடாளுமன்ற முறைமை பற்றி அறியவில்லை. பைத்தியம் பிடித்தவர்கள் நாடாளுமன்றத்துக்கு வந்துள்ளதால் பல பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. நான் இருந்திருந்தால், இவரை நாடாளுமன்றத்துக்கு அனுப்பியிருக்கமாட்டேன் என சபை முதல்வர் நாடாளுமன்ற உறுப்பினர் கெவிந்து குமாரதுங்கவை நோக்கி கடுமையாக சாடினார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, இந்த சட்டமூலம் பரந்துபட்ட விடயங்களை உள்ளடக்கியுள்ளது. ஆகவே, நீதிமன்றத்தின் வியாக்கியானத்துக்கு அமைய செயற்பட வேண்டும் என்றார்.

எதிரணியின் சுயாதீன உறுப்பினர் சந்திம வீரக்கொடி, நிதி இராஜாங்க அமைச்சர் சிறுப்பிள்ளைத்தனமான விடயத்தை குறிப்பிட்டார். சட்டமூலம் அரசமைப்புக்கு சார்பானதா? அல்லது எதிரானதா? என்பதை மாத்திரமே உயர்நீதிமன்றம் ஆராயும். கொள்கை ரீதியில் நாடாளுமன்றமே தீரமானம்எடுக்கவேண்டும். ஜனாதிபதிகுறிப்பிடுவதை எல்லாம் கேட்டுவிட்டு இங்கு வந்து கிளிப்பிள்ளை போல் பேசுகிறார் என்றார்.

## சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்டுள்ள 6 ஆயிரம் சிகரெட்டுகளுடன் ஒருவர் கைது

சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட 6 ஆயிரம் சிகரெட்டுகளுடன் சந்தேக நபரொருவர் வெல்லம்பிட்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொலன்னாவை பிரதேசத்தில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பிலேயே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் கொலன்னாவை பிரதேசத்தைச் சேர்ந்த 46 வயதுடையவர் ஆவார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் வெல்லம்பிட்டி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக வெல்லம்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (05)

## தேரர் கைது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எவ்வாறாயினும், நாடாளுமன்றத்தில் எரிசக்தி மற்றும் போக்குவரத்து துறைசார் மேற்பார்வைக் குழு முன்வைத்த விடயங்கள் மற்றும் நீதிமன்றத்தினால் முன்வைக்கப்பட்ட திருத்தங்களுடன் இலங்கை மின்சார சட்டமூலம் நிறைவேற்றப்படும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர குறிப்பிட்டிருந்தார்.

இதேவேளை, எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி முதல் மின் கட்டணம் குறைக்கப்படவுள்ளதாக அமைச்சர் கஞ்சன விஜேசேகர நாடாளுமன்றத்திற்கு அறிவித்தார்.

## ஹோட்டல் உரிமையாளரின் அறையில் நகைகள் திருட்டு

### பணியாளர் கைது

முல்லேரியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கெலனிமுல்ல பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றின் உரிமையாளரின் அறையிலிருந்து 94 லட்சம் ஷரூபா பெறுமதியான நகைகளைத் திருடிய சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரொருவர் மேல் மாகாணத்தின் தெற்கு பிராந்திய பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த திருட்டு சம்பவம் கடந்த மே மாதம் 12 ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர் வாதுவை பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட் டுள்ளார்.

கொழும்பு, மாலபே பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதுடைய நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் இந்த ஹோட்டலில் பணியாளராகக் கடமையாற்றியுள்ளார் என விசாரணையில் தெரியவந்துள்ளது.

விசாரணையில் சந்தேக நபரிடமிருந்து தங்க நகைகள் மற்றும் 2,055,000 ரூபா பணம் உள்ளிட்ட பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக முல்லேரியா பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முல்லேரியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# ஐ.நா. வதிவிட பிரதிநிதி கொக்குத்தொடுவாய் மனித புதைகுழிக்கு கண்காணிப்புப் பயணம்





இலங்கைக்காக ஐநாவின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மார்க் ஆண்ட்ரே பிராஞ் கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அமைந்துள்ள பகுதிக்கு கண்காணிப்பு விஜயம் ஒன்றை நேற்று (வியாழக்கிழமை) மேற்கொண்டுள்ளார்.

வடக்குக்கு விசேட பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ள ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி நேற்று முல்லைத்தீவு மாவட்டத்தில் பல்வேறு தரப்பினரை சந்தித்து கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகிறார்.

அந்த வகையில் அகழ்வு பணிகள் இடம்பெற்று வரும் கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அமைந்துள்ள பகுதிக்கும் சென்று பார்வையிட்டுள்ளார். இதன் போது முல்லைத்தீவு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்க இணைப்பாளர் மரியசுரேஷ் ஈஸ்வரி மற்றும் இந்த புதைகுழி வழக்கை முன்னெடுத்து வரும் சட்டத்தரணிகளில் ஒருவரான கணேஸ்வரன் ஆகியோர் புதைகுழி அமைந்துள்ள பகுதியில் ஐ.நாவின் வதிவிடப் பிரதிநிதிக்கு நிலைமைகளை தெளிவுபடுத்தினர். (05)

## 2024 இன் முதல் காலாண்டில் எச்.ஐ.வி. பாதிப்பு அதிகரிப்பு

இவ் ஆண்டின் முதலாவது காலாண்டில் 207 பேர் எச்.ஐ.வி நோயால் பாதிக்கப்பட்டுள்ளதோடு, 13 பேர் உயிரிழந்துள்ளனர் என தேசிய பால்வினை நோய்கள் மற்றும் எய்ட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்டம் தெரிவித்துள்ளது.

இது 165 பேர் எச்.ஐ.வி நோயால் பாதிக்கப்பட்டிருந்த கடந்த ஆண்டுடன் ஒப்பீடும் போது 25 சதவீத அதிகரிப்பை காட்டுகிறது.

அதன்படி, இவ் ஆண்டின் முதலாவது காலாண்டில் பதிவான நோயாளர்களில் 23 ஆண்களும், ஐந்து பெண்களும் 15-24 வயதுக்கு உட்பட்டவர்களாவர். எஞ்சியவர்கள் 25 வயதுக்கு மேற்பட்டவர்களாவர்.

எச்.ஐ.வி ஆண் மற்றும் பெண் நோயாளர்களின் விகிதம் 7:1 ஆக உள்ளது.

இதேவேளை, கடந்த ஆண்டு 43 எச். ஐ. வி நோயாளர்கள் உயிரிழந்துள்ளனர்.

இது குறித்து தேசிய பால்வினை நோய்கள் மற்றும் எய்ட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் பணிப்பாளர் வைத்தியர் வினோ தர்மகுலசிங்க தெரிவித்துள்ளவை வருமாறு -

2018 ஆம் ஆண்டிலிருந்து எச்.ஐ.வி தொற்றாளர்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்து வருகிறது.

பரிசோதனை திறன் விரிவாக்கம், பாலியல் கல்வி மற்றும் ஆபத்தான பாலுறவு நடத்தை குறித்து மக்களிடையே கல்வி அறிவு இன்மை அறிவு மற்றும் உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்காதது தொற்றாளர்கள் அதிகரிப்பிற்கு காரணம் என குறிப்பிட்டுள்ளார்.(05)

## தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு ஸ்டார்லிங்க் இணையச் சேவைக்கு அனுமதி வழங்கல்

இலங்கையில் செயற்கைக்கோள் அடிப்படையிலான இணைய சேவைகளை வழங்குவதற்கு ஸ்டார்லிங்க் நிறுவனத்திற்கு இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குப்படுத்தல் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளதாக தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் அறிவித்தார்.

உரிய வகையில் பொதுமக்கள் கருத்தறியப்பட்டதன் பின்னரே இந்த அனுமதி வழங்கப்பட்டிருப்பதாகவும், இது தொடர்பான மேலதிக தகவல்கள் இன்று வெளியிடப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். செய்மதிகளின் கூட்டமைப்பு மூலம் பூமிக்கு மிக அதிவேகமான இணைய சேவையை ஸ்டார்லிங்க் வழங்குகிறது. அதிவேக இணைய வசதி கிடைக்காத தொலைதூரப் பகுதிகளுக்கு இந்த சேவை வழங்குவதே இதன் குறிக்கோள் ஆகும். (05)

## முகத்துவாரம் கடற்கரையில் ஆண் ஒருவரின் சடலம் மீட்பு

கொழும்பு, முகத்துவாரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட லேல்லம கடற்கரையிலிருந்து ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டதாக முகத்துவாரம் பொலிஸார் தெரிவித்தனர். பிலியந்தலை பிரதேசத்தைச் சேர்ந்த 43 வயதுடைய நபரொருவரே உயிரிழந்துள்ளார்.

இவர் ஊடக நிறுவனமொன்றில் பணியாற்றியவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரது சடலம் பிரேதப் பரிசோதனைக்காகக் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முகத்துவாரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

## தலைமைத்துவ வெற்றிடம் சமுதாயத்தில் உள்ளது

### யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி விசனம்

இன்றைய சமுதாயத்தில் தலைமத்துவத்திற்கு வெற்றிடம் காணப்படுகிறது என யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் இ. சுரேந்திரகுமார் தெரிவித்தார்.

செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகனின் 63 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு அறநிதியச் சபையால் நடத்தப்பட்ட இளைய தலைமுறை ஆற்றளாளர் விருது வழங்கும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் அமைந்துள்ள அன்னபூரணி மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இன்றைய சமுதாயத்தில் தலைமத்துவத்திற்கு பெரும் வெற்றிடம் காணப்படுகிறது இந்த வெற்றிடம் அரசியல் தலைமத்துவத்திடமும் சமுதாய தலைமைத்துவத்திலும் காணப்படுகிறது. இந்த வெற்றிடம் நிரப்பப்படவேண்டும்.

ஒரு சமுதாயம் சிறந்த முறையில் கட்டமைக்கப்பட்டு அதனை முறையாக நிர்வகித்து வந்தால்தான் எதிர்கால சமுதாயம் நீடித்து நிலைத்து நிக்கின்ற சமுதாயத்தை உருவாக்கி கொள்ள முடியும்.

இன்றைய சூழலில் இளைஞர்கள் வெளிநாடுகளுக்கு செல்வதையே அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அது அவர்களுடைய தவறு இல்லை. அவர்களுக்கான சரியான பாதையை காட்டமுடியாததுதான் காரணம். வெளிநாடுகளில் உள்ள தமது சகோதரர்கள், நண்பர்கள் போல் தாமும் பணம் சம்பாதிக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள் இதனை தவறு என்று கூறமுடியாது. ஆனால் அவர்கள் சமுதாயத்திற்கு உதவிகளை செய்யவேண்டும் என்பதை உள்வாங்கி கொள்ள வேண்டும்.

இன்றைய கல்வி முறையில் மாற்றங்களை செய்ய வேண்டும். தற்போதைய கல்வி முறையில் லிகிதர்களையும், நிர்வாக உத்தியோகத்தர்களையே உருவாக்குகின்றது, கல்விமுறையில் மாற்றம் ஏற்படுத்தி சிந்திக்கத்தக்க தத்துவ ஞானிகளையும், விஞ்ஞானிகளை, பொருளாதார வல்லுநர்களை உருவாக்கும் கல்வி முறை வேண்டும். வெளிநாடுகளில் இதனையே செய்கிறார்கள். இளையோரை உருவாக்கும் கட்டமைப்புகள் கொண்ட நிறுவனங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

தற்போதைய காலத்திற்கு என்ன தேவையாய் உள்ளதோ அதனை உருவாக்கும் மனப்பான்மை உடையவர்கள் தேவையாகவுள்ளது. இன்றைய இளைய தலைமுறை ஆற்றலாளர் விருதுக்கு தெரிவு செய்ய பட்டவர்களில் ஒருவர் வைத்தியர் அவருடைய சேவை எவ்வாறு உள்ளது என்பது யாவரும் அறிந்தது. கொழும்பில் சிறந்த பணிகளை செய்து வருகின்றார். மற்றொருவர் பாக்கு நீரிணையை கடந்து சாதனை படைத்த சிறுவன் இந்த சிறுவனை ஊக்கப்படுத்திய பெற்றோரை பாராட்டவேண்டும். நீச்சலில் மட்டுமல்ல கல்வி யில் அவன் சிறந்து விளங்க வேண்டும். நீச்சல் வீரர் என்னும் போது ஆழிக்குமரனை யாரும் மறந்து விட முடியாது.

ஆனால் இன்று எங்கு நீச்சல் தடாகம் உள்ளது. ஆழிக்குமரன் உறவினர்களிடம் உள்ளது. யாழில் மத்திய கல்லூரியில் அமைக்கப்பட்ட போதும் அவை இன்று பயன்பாடு இன்றி உடைந்த நிலையில் காணப்படுகிறது. நீச்சல் தொடர்பில் யாரும் கவனம் செலுத்துவதில்லை. அதன்சாதகங்களை பரிசோதிப்பதும் இல்லை. நீச்சல் வயோதிபர்களுக்கு சிறந்த உடற்பயிச்சியாகும். இது தேவையானதும் கூட. இது தொடர்பிலும் அவதானங்கள் தேவை சமூகத்திற்கு செய்யவேண்டிய பணிகள் நிறைய இருக்கின்றன. செய்யகூடியவர்களை அடையாளம் காணவேண்டும்.

சமுதாயத்தில் அறப்பணி செய்யும் அமைப்புகளுக்கு உதவி செய்யும் மனநிலை வெளிநாடுகளில் உள்ளவர்களுக்கு இருப்பதுபோல் உள்ளூரில் இருப்பவர்களும் உதவி செய்ய முன்வர வேண்டும். சமுதாயத்தை நல்வழிப்படுத்துவதற்கு கலாநிதி ஆறு.திருமுருகன் போல் பலர் தேவையாக உள்ளதுஇ இவர்களை கண்டுபிடிக்க வேண்டும். உருவாக்கவேண்டும். - என்றார்.(05)

## கஜமுத்துடன் இளைஞர் கம்பஹாவில் கைது

கம்பஹா, திவுலப்பிட்டிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் கஜ முத்துடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக திவுலப்பிட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிரலோகம பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் இந்த கஜ முத்தை 6 மில்லியன் ஷரூபாவுக்கு விற்பனை செய்வதற்குத் தயாராக இருந்துள்ளார் என பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை திவுலப்பிட்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

## யாழ். அச்சுவேலி உலவிக்குளம் ஆலய உபதலைவர் மீது கோடாரித் தாக்குதல்



யாழ்ப்பாணம் அச்சுவேலி உல விக்குளம் ஆலய உப தலைவர் மீது கோடாரியால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அச்சுவேலி பகுதியை சேர்ந்த 38 வயதுடைய நபர் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

குறித்த நபர் வேலைக்கு செல்வதற்காக நேற்று (வியாழக்கிழமை) காலை , தனது மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த வேளை , உலவிக்குளம் பிள்ளையார் கோவி லுக்கு முன்பாக இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்த ஐவர் அடங்கிய வன்முறை கும்பல் நபரை வழிமறித்து தாக்குதல் மேற்கொண்டு , கோடரி யால் தாக்கி படுகாயம் ஏற்படுத்தி விட்டு தப்பி சென்றுள்ளனர்.

தாக்குதலாளிகள் தங்கள் முகங்களை கறுத்த துணியால் மூடிக்கட்டி இருந்தனர் என தாக்குதலுக்கு இலக்கான நபர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

காயமடைந்த நபர் அச்சுவேலி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் நிலையில் அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

அதேவேளை, குறித்த ஆலயத்திற்கு சொந்தமான ஆலயத்துடன் உள்ள காணியை அறிக்கைப்படுத்தி, ஆலய நிர்வாகத்தினரால் வேலி அமைக்கப்பட்ட போது, ஆலய காணியையும், அருகில் உள்ள காணியையும் இணைத்து மைதானமாக பாவித்து விளையாடி வந்த இளைஞர்கள் எதிர்ப்பு தெரிவித்த நிலையில், கடந்த ஏப்ரல் மாதம் காணியை சுற்றி அடைக்கப்பட்டு இருந்த வேலி இனம் தெரியாத நபர்களால் பிடுங்கி எறியப்பட்டு இருந்தது. அது தொடர்பில் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டு விசாரணையில் முன்னெடுப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

காலைக்கதிர் Kalaikkathir

உ
முருகன் துணை

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

## செவ்வழி நயனம்

# விழுமியப் பண்புகளைக் கடைப்பிடிப்போம்



மனித வாழ்வு மேம்பாடானது எனக் கருதுவதற்கு உதவும் பெறுமதி மிக்க வாழ்க்கைப் பண்புகளே விழுமியங்கள் எனப்படுகின்றன. எமது வாழ்வில் போற்றி வளர்க்க வேண்டிய உயர்ந்த மனிதப் பண்புகள் பல உள. அவை யாவும் மனிதனை மனிதனாக வாழ வைப்பன. மனித விழுமியங்களில் முதன்மையானதும் அடிப்படையானதும் அன்பே ஆகும். அதற்கு மாபெரும் ஆற்றல் உண்டு. எனவேதான் உலக மகாசக்தி என அன்பு போற்றப்படுகின்றது. அன்பை அடிப்படையாகக் கொண்டு எழும் எல்லாச் செயலும் மேம்பாடு உடையதாகும்.

மனம் தூய்மையாய் இருத்தல் உளத்தூய்மையாகும். புறத்தூய்மை நீரால் அமையும், அகத்தூய்மை அன்பால் அமையும். சிந்தனை, சொல், செயல் என்பன தூய்மையானதாக அமைய அன்பு வேண்டும். இதனால் பொய், களவு, குருநிந்தனை போன்ற பஞ்சமாபாதகங்கள் இல்லாது ஒழியும். உள்ளம் தூய்மையாய் இருக்கும் போது அங்கே பொறாமை இருக்காது. ஷஷமனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன் ஷஷமனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன் ஷஷமனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன் ஆகுல நீரபிற;; என்பது - வள்ளுவர் வாக்கு மனதிலே அழுக்கில்லாதிருத்தல் எல்லா அறங்களிலும் மேலானது. மனிதனுடைய உள்ளத்திலே அன்பு இருந்தால் பேரவா, கோபம், அதன் காரணமாக கொடுமையான சொற்கள் என்பன இடம்பெறாது.



புலமையான அறிவு மட்டும் உயர்நிலை விழுமியமாகாது. ஒருவர் வாழும் பொருட்டுச் சம்பாதிக்க அது உதவலாம். வாழ்வின் சவால்களுக்கு முகம் கொடுக்க கூடியவாறு அறப் பண்புடைய உளத்தூய்மையே மனிதனை உயர்ந்தவனாக்குகின்றது. அன்பு மனத்தூய்மையை மேம்படுத்தும். தூய்மை தெய்வீகத்தை மலரச் செய்யும். எனவே மனிதன் உளத்தூய்மையுடன் இருக்கும் போதே அவன் வாழ்வில் அமைதியையும் சகிப்புத்தன்மையையும் ஆனந்தத்தையும் பெறுகின்றான்.

மனத்தூய்மை உள்ள இடத்திலேயே சகிப்புத்தன்மை ஏற்படும். அந்நிலையில் சமாதானம் பிறக்கும், இந்நிலையில் பிறருக்கு உதவி செய்தல் நிகழும். உண்மையான தலைமைத்துவப் பண்பும் மனத்தூய்மையால் விருத்தி அடையும் மனத்தூய்மையே அதி உயர்ந்த விழுமியங்களில் ஒன்றாகும். ஒருவர் மற்றவருடன் பழகும் போதும், அண்டை அயலவருடன் பழகும் போதும் சகிப்புத்தன்மை இல்லாது விட்டால் உறவு கொள்ளமுடியாது. மற்றவர் கூறும் கருத்துக்களில் வேறுபாடு இருக்கலாம். ஆனால் அவற்றை செவிமடுத்தல் சிறந்த பண்பாகும். நாம் பொறுமையாக இருந்தால் வாழ்க்கையில் வெற்றி பெறலாம். எனவே அடுத்தவர்கள் எங்களுடன் ஆத்திரப்பட்டாலும் பொறுமையாகச் சகித்து கொள்வோமேயானால் நாம் பகைக்காது உறவாட முடியும். மனிதனை உயர்ந்த பண்புள்ளவனாக்கும் பொறுமையும், அதனால் உண்டாகும் சகிப்புத்தன்மையும் வாழ்வில் வெற்றியைத் தரு கின்றது.



அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல தம்மை இகழ்வாரைப் பொறுத்தல் தலை;; என்கிறது பொய்யா மொழி. மற்றவர்கள் எமக்கு தீங்கு செய்யும் போது அவர்களைப் பகைக்காது அவர்களுடன் அன்பாக உறவாடுவது சிறந்த அறச்செயலாகும். வாழ்க்கையில் வெற்றிக்குரிய சிறந்த நற்சாட்சியாக அமைவது பணிவாகும். மகிழ்ச்சிக்கு உறுதியைத் தருவதும் பணிவாகும். இத்தகைய பணிவுள்ள இடத்திலேயே சகிப்புத்தன்மை ஏற்பட முடியும். மனம் மாசில்லா இடத்திலேயே சகிக்கும் தன்மை ஏற்படும். அகம்பாவம் உள்ள இடத்தில் சகிப்புத்தன்மை நிலை கொள்ள முடியாது. பொறுத்தார் பூமியாள்வார் பொங்கினார் காடாள்வார்;; என்பது முதுமொழி. சகிப்புத் தன்மை இழந்தவன் வாழ்வில் அமைதி இழந்தவனாவான்.

உரிய விடயத்தை உரிய காலத்தில் முன்னெடுத்துச் செல்லும் தகைமை தலைமைத்துவப் பண்பாகும். ஒவ்வொரு மாணவனும் தளரா உறுதியும் நேரிய நோக்கும் கொண்டவனாக பெற்றோர்களாலும் ஆசிரியர்களாலும் சமூகத்தாலும் வளர்த்தெடுக்கப்படும் நிலையிலேயே அவன் தலைமைத்துவப் பண்புடைவ னாகின்றான். சுயநலத்தினின்றும் விடுபட்டு பிறர்நலம் பேணும் ஒருவரே உண்மையான தலைவனாக முடியும். சிறந்த ஒரு தலைவன் நேரக் கட்டுப் பாடுடையவனாகவும் சூழலை ஒட்டியவனாகவும் சிறந்த ஒருங்கிணைப்பாளராகவும் இருப்பான். மேலும் சிறந்த நல்ல ஒழுகலாறுகளைப் பேணுபவனாகவும் சூழ்நிலைகளை அறிந்து செயற்படுபவனாகவும் மற்றவரின் கருத்துக்கு மதிப்பளிப்பவனாகவும் மொழிப் புலமை உடையவனாகவும் இருப்பான். மொழியாற்றல் ஒரு தலைவனுக்கு இன்றியமையாப் பண்பாகும். தலைவன் தான் எடுத்துக் கொண்ட விடயத்தை முடிப்பதற்கு ஏனையவர்களின் உதவி கிடைக்காவிட்டாலும் தனித்து நின்றேனும் செயற்படும் திறன் பெற்றிருக்க வேண்டும். மாணவர்கள் தமக்குரிய உரிமைகள் பற்றித் தனித்துக் கவனம் செலுத்தாமல் தமக்குரிய கடமைகள் பொறுப்புக்கள் பற்றிய கரிசனை உடையவர்களாக இருத்தல் அவசியம். பொறுப்புக்களை விரும்பி ஏற்றுச் செய்யும் சேவை தலைமைத்துவப் பண்புகளுளொன்றாகும். குடும்பத்திலும், சமூகத்திலும், நாட்டிலும் ஏற்படும் பிரச்சினைகளுக்கும் அதனால் ஏற்படும் துன்பங்களுக்கும் நல்லதோர் தீர்வை எட்டச் செய்பவனே தலைவன்.

நாயன்மார்கள் நாட்டில் ஏற்பட்ட துன்பங்களைத் தீர்க்க தலைமை ஏற்று நடந்தமை குறிப்பிடத்தக்கது. தூய உள்ளத்தோடு சமூகத்திற்கு சேவை செய்வதற்கு தம்மைத் தாமே ஆக்கிக்கொள்ளும் திறனை மாணவரிடையே விருத்தி செய்வதே ஆசிரியரின் தலையாய பணியாகும். மாணவர்கள் பாடசாலையில் கற்கும் காலத்திலே அவர்களிடையே தலைமைத்துவப் பண்பை வளர்ப்பவராக ஆசிரியர் விளங்க வேண்டும். பாடசாலையில் அமைக்கப்பட்டிருக்கும் பல்வேறு மன்றங்களில் மாணவர்கள் இணைந்து அந்த அமைப்புகளின் மூலம் ஆற்ற வேண்டிய கடமைகளைச் செவ்வனே செய்தல் சிறப்புடைய தலைமைத்துவத்தை எடுத்துக் காட்டுவதாகும். உதாரணமாக சைவ மன்றத்தினூடாக மாணவர் செயற்படும் போது சைவ வாழ்வினைப் பிரதிபலிப்பவராக சிறந்த ஒழுக்க சீலராகக் காணப்படுவார்.

தெய்வேந்திரம் வஜிதா

காலைக்கதிர் Kalaikkathir

# மட்டக்களப்பு தேவாலயத்தில் படுகொலை செய்யப்பட்ட சந்திரா பெர்னாண்டோவின் 36 ஆவது நினைவு நினைவு





மட்டக்களப்பு புனித மரியாள் தேவாலயத்தில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்ட மனித உரிமை செயற்பாட்டாளர் அருட்தந்தை சந்திரா பெர்னாண்டோ அடிகளாரின் 36 ஆவது ஆண்டு நினைவேந்தல் புனித மரியாள் தேவாலயத்தில் அமைக்கப்பட்டிருக்கும் அருட்தந்தையின் சமாதியில் நேற்று (வியாழக்கிழமை) உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் முன்னிலையில் ஈகைச்சுடர் ஏற்றி மலர் தூவி அனுஷ்டிக்கப்பட்டது.

1988 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 06 ஆம் திகதி இந்திய இராணுவத்துடன் இணைந்து செயற்பட்ட ஆயுதக்குழுவினால் மட்டக்களப்பு புனித மரியாள் தேவாலயத்தில் வைத்து அருட்தந்தை சந்திரா பெர்னாண்டோ சுட்டுக்கொல்லப்பட்டார்.

மட்டக்களப்பு சர்வ மத ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்று இடம்பெற்ற அருட்தந்தையின் 36 ஆவது நினைவேந்தலில் சர்வமத தலைவர்கள், வணபிதாக்கள், சமூக செயற்பாட்டாளர்கள், அன்னாரின் உறவினர்கள், பொதுமக்கள் என பலர் கலந்துகொண்டு அன்னரின் ஆத்மசாந்தி வேண்டி, அவரின் சமாதியில் உள்ள திருவுருவப்படத்துக்கு மலர் மாலை அணிவித்து, ஈகைச்சுடர் ஏற்றி மலர் தூவி விசேட பிரார்த்தனையுடன் அஞ்சலி செலுத்தினர்.

அருட்தந்தை சந்திரா பெர்னாண்டோ 09.08.1948 அன்று மட்டக்களப்பு புளியந்தீவில் பிறந்தவர் ஆவார்.

இவர் தனது ஆரம்ப கல்வியை சென்.மேரிஸ் பாடசாலையிலும், உயர்கல்வியை புனித மிக்கல் கல்லூரியிலும் கற்றார்.

தனது குருக்கல்வியை இந்தியாவின் பெங்களூரிலும் சென்னையிலும் பயின்று 1972.09.21 அன்று குருப்பட்டத்தை மட்டக்களப்பு மறைமாவட்ட பிஷப் கிளரின் ஆண்டகை முன்னிலையில் ஏற்றார்.


அதன் பின்னர், உதவி பங்குத்தந்தையாக மட்டக்களப்பு நகர் தேவாலயத்திலும், மட்டக்களப்பு தாண்டவன்வெளி மாதா தேவாலயத்திலும், திருகோணமலை மாதா தேவாலயத்திலும், சின்னக்கடை திருகோணமலை தேவாலயத்திலும் பணிபுரிந்து 1978ஆம் ஆண்டு மட்டக்களப்பு ஆயர் இல்லத்தின் நிர்வாகத்துக்கு நிதிப்பொறுப்பாளராக செயலாற்றினார். 1981ஆம் ஆண்டு மறைக்கோட்ட முதல்வரானார்.

அதே காலப்பகுதியில் கல்லாறு தேவாலயத்தில் பங்குத்தந்தையாகவும் இருந்தார். 1984 ஆம் ஆண்டு மட்டக்களப்பு மறைக்கோட்ட முதல்வராக பொறுப்பேற்ற இவர் உயிர் துறந்த பின்னர், இவருக்கு விடுதலைப்புலிகளின் தலைவரால் 'நாட்டுப்பற்றாளர்' கௌரவம் வழங்கப்பட்டது.

(05)

# வடக்கு, கிழக்கு, மலையக மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு ஒன்றிணையவேண்டும்

## உயர்தர பரீட்சை முடிவுகள் மனதிற்கு நிம்மதி தருகிறது என்கிறார் கலாநிதி ஆறு.திருமுருகன்



*வடக்கு ,கிழக்கு மற்றும் மலையக மாணவர்களின் கல்வி வளர்ச்சிக் கல்வியியலாளர்கள் ஒன்றிணையவேண்டும். வடக்கின் க.பொ.த உயர்தர பரீட்சை முடிவுகள் மனதிற்கு நிம்மதி தருகிறது என தொல்லிப்பழை துர்கை அம்மன் தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் தெரிவித்தார்.*

*கல்வி பொதுத்தராதர உயர்தர பரீட்சை முடிவுகள் மற்றும் கல்வி நிலைமைகள் தொடர்பில் கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.*

*அவர் மேலும் தெரிவிக்கையில் –*

*வடக்கில் கல்விப் பெறுபேறுகள் அதிகரித்துள்ளமை பாராட்டத்தக்கது அண்மையில் வெளியான உயர் தரப் பரீட்சைகளின் பெறுபேறுகள் வடக்கு மாகாணத்தை பொறுத்தவரையில் மனதிற்கு திருப்தி தருகின்றது. இந்த முயற்சிகளை எடுத்த பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கு பாராட்டுக்கள்.*

*வடக்கின் கல்வி தொடர்பாக பல்வேறு குற்றச்சாட்டுக்கள் இருந்தபோதிலும் இவற்றைப் பொருட்படுத்தாது பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், கூடிய கவனம் எடுத்து ஆர்வம் காட்டியமை பாராட்டத்தக்கது. இவ்வாறானவர்களுக்கு எமது நன்றியுடையவர்களாக இருப்பதுடன் இவர்களுக்கு உதவிகளையும் செய்யவேண்டும்.*

*சிறந்த பெறுபேறுகளை பெற்ற மாணவர்கள் பலர் பாடசாலைக்கு ஒழுங்காகவும் நேர ஒழுக்களை கடைப்பிடித்தும் இறுதி வரை ஒழுங்காக பாடசாலைக்கு சமுகம் அளித்திருப்பதாகவும் அதேநேரம் பாடசாலைக்கு நேரங்கள் ஒழுங்கீனம் அற்ற நிலையில் வருகை தந்தவர்கள் ஒழுங்கான பெறுபேற்றை அடையவில்லை என்பதும் அடையாளப்படுத்தக்கூடியதாக இருப்பதாக அதிபர், ஆசிரியர்கள் மூலம் அறியக்கூடியதாகவுள்ளது.*

*எனவே எதிர்காலத்தில் அனைத்து மாணவர்களும் நேரம், ஒழுக்கம்,கட்டுப்பாடு ஆகியவற்றில் அக்கறை எடுப்பதற்கு பெற்றோர்கள் அதிபர், ஆசிரியர்கள் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.*

*மேலும், இன்று மலையக மாணவர்கள் கல்வியில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று வருகின்றார்கள். இந்த மாணவர்களது விஞ்ஞான துறை வளர்ச்சிக்கு முறையான திட்டமிடல்களை மேற்கொண்டு அவர்கள் சிறந்த பெறுபேறுகளை பொற்றுக்கொள்ள கல்வித்துறை சார்ந்தவர்கள் உழைக்க வேண்டும்.*

*இதேவேளை, வடக்கு, கிழக்கு மாகாணம், மலையக கல்வி அபிவிருத்தி தொடர்பாக கூட்டுப்பொறுப்பாக கல்வி சார்ந்த அறிஞர்கள் ஒன்றுபட்டு உழைக்கவேண்டும்.*

*வடக்கு ,கிழக்கு , மலையகம் ஒன்றிணைந்து மாதிரிப் பரீட்சை வினாத்தாள்களை புலமை வாய்ந்தவர்கள் தயாரித்து அச்சிட்டு நிறுவனங்கள் அவற்றை இலவசமாக வழங்கி தமிழ் மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கு உதவி செய்யவேண்டும்.*

*சிறந்த பெறுபேறுகளை பெற்றுக் கொண்ட மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி தொடர்பாக விண்ணப்பங்கள் அனுப்புவது தொடர்பில் பல்கலைக்கழக கல்வியியலாளர்கள் எவ்வாறு விண்ணப்பிப்பது தயாரிப்பது என்பது தொடர்பில் விளக்கங்களை விளங்கி பயனடையச் செய்வதற்கான தெளிவுபடுத்தல்களை முறையாக செய்யவேண்டும்.*

*வடக்கு கிழக்கு மலையக கல்வியியலாளர்கள் ஒன்றிணைந்து தமிழ் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு ஒன்றிணைந்து செயற்படுத்துவதற்கு திட்டமிடல்கள் செய்யவேண்டும். – என்றார்.*

*(05)*

# 14 வயது சிறுவனின் கத்திக்குத்துக்கு இலக்காகி 9 வயதுச் சிறுவன் காயம்

அம்பாந்தோட்டை, அங்குனகொலபெலஸ்ஸ பிரதேசத்தில் கத்திக் குத்துக்கு இலக்காகி 9 வயது சிறுவன் காயமடைந்துள்ளார் எனப் பொலி ஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

அம்பாந்தோட்டை, அங்குனகொலபெலஸ்ஸ பிரதேசத்தைச் சேர்ந்த 9 வயதுடைய சிறுவனொருவரே காயமடைந்துள்ளார்.

இவர் தனது வீட்டில் தனிமையில் இருக்கும் போது அயல் வீட்டில் வசிக்கும் 14 வயது சிறுவனால் இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர் அம்பாந்தோட்டை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவத்தையடுத்து, சந்தேக நபரான 14 வயது சிறுவன் விஷம் அருந்தியுள்ள நிலையில் எம்பிலிப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கத்தி குத்துக்கு இலக்கான 9 வயது சிறுவனின் வீட்டில் பணம் திருடப்பட்ட சம்பவம் ஒன்று தொடர்பில் சந்தேக நபரான 14 வயது சிறுவனுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் இதன் காரணமாக இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (05)

# 20 ஆடுகளை சிறியரக வாகனத்தில் கடத்திச் சென்ற இருவர் கைது





அதிகளவிலான ஆடுகளை சிறிய படி ரக வாகனமொன்றில் அடைத்து வைத்து மிக நீண்ட தூரம் கடத்திச் சென்ற இருவரை நேற்று (வியாழக்கிழமை) காலை மிருக வதைச் சட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்ட குற்ற விசாரணை பிரிவினர் கைது செய்துள்ளதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜி. கஜநாயக்க தெரிவித்தார்.

காத்தான்குடி பிரதான வீதியில் நேற்று அதிகாலை மாவட்ட குற்ற விசாரணை பிரிவினர் நடத்திய திடீர் தேடுதலின்போது, பொலன்னறுவை மாவட்டத்தின் மிகிந்தலை பிரதேசத்தில் இருந்து அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை பிரதேசத்துக்கு சுமார் 20 ஆடுகளை சிறிய படி வாகனத்தில் கடத்திச் சென்றுகொண்டிருந்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆடுகளையும் சந்தேக நபர்களையும் மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவினர் காத்தான்குடி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

சந்தேக நபர்கள் இருவரை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் காத்தான்குடி பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (05)

காலைக்கதிர்
Kalaikkathir




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.06.2024இல் வெளியிடப்பெற்றது